தமிழ் வளர்த்த
நான்கு தமிழ் பேராசிரியர்கள்

Four Tamil Professors
who uplifted the Tamil Language

1. சுவாமி விபுலானந்தர்
2. பேராசிரியர் சு.வித்தியானந்தன்
3. பேராசிரியர் கா.சிவத்தம்பி
4. பேராசிரியர் க.கைலாசபதி

நூலாசிரியரும் பதிப்பாசிரியரும் :

சி . குமாரலிங்கம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமிழ் வளர்த்த
நான்கு தமிழ் பேராசிரியர்கள்

Four Tamil Professors
who uplifted the Tamil Language

1. சுவாமி விபுலானந்தர்
2. பேராசிரியர் சு.வித்தியானந்தன்
3. பேராசிரியர் கா.சிவத்தம்பி
4. பேராசிரியர் க.கைலாசபதி

(தேசிய நூலக ஆவணவாக்கல் சேவைகள் சபையில் பதிவு செய்யப்பட்டது.)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

09 செப்ரெம்பர் 1951ல் பிறந்த எமது நாட்டின்
ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன
அவர்களுக்கு இந்நூல் சமர்ப்பணம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Title :	**Four Tamil Professors who uplifted the Tamil Language**
Author and Publisher:	**S.Kumaralingham**
Address :	**149, Chemmani Road, Nallur, Jaffna.**
No of Copies:	**500 First Editiion**
Price :	**Rs 200/=**
Copy righy:	**The Author**
Printer ;	**S.S.R Printers, 17, Saddanathar Road, Nallur, Jaffna.**
Date of Publication:	**15.04.2016**
Bank Account No :	BOC **0072117086**
ISBN :	**978-955-51477-7-4**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்னுரை...

இந்த நூலில் புகழ்பெற்ற நான்கு தமிழ்ப் பேராசிரியர்களுடைய வரலாறு கூறப்பட்டுள்ளது.

அவர்கள் தமிழ் மொழியை வளர்ப்பதற்கு எடுத்த நடவடிக்கைகள் கூறப்பட்டுள்ளது.

இதை விட பேராசிரியர் கைலாசபதி நவீன இலக்கியத்தின் அடிப்படைகள் என்ற தலைப்பில் வானொலியில் ஆற்றிய உரை தரப்பட்டுள்ளது.

முற்போக்கு எழுத்தாளர் சங்கத்தின் வரலாறு கூறப்பட்டுள்ளது.

இதுவரை எனது எல்லா நூல்களையும் வாங்கி ஆதரித்த எல்லோருக்கும் எனது நன்றிகள்.

இந்த நூல் மாணவர்களுக்கும் சாதாரண பொது மக்களுக்கும் பயன்தரவல்லது.

சி. குமாரலிங்கம்.
149, செம்மணி வீதி,
நல்லூர்,
யாழ்ப்பாணம்.
10.04.2016

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உலகின் முதல் தமிழ்ப் பேராசிரியர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பேரி யாழ்
(மலைபடு கடாஅத்துட்
கூறப்பெற்றது)



மகர யாழ்
(வருணன் ஊர்தி)



பத்தர், கோடு, வறுவாய்



ஐயாயிரம் ஆண்டுகளுக்கு
முன்னிருந்த யாழ்க் கருவி



மகர யாழ்
(காமன் கொடி)



சீறி யாழ்



வில் யாழ்



சகோட யாழ்



மகர வெல்கொடி

யாழ் நூலில் குறிப்பிடப்படும் யாழ்களில் சில

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1892

மட்டக்களப்பிற்கு தெற்கே 39கி.மீ தூரத்தில் உள்ள காரைதீவு என்னும் கிராமத்திலே 27.03.1982ல் பிறந்தார். அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் முதல் தமிழ் பேராசிரியராக நியமிக்கப்பட்டு 3 ஆண்டுகள் சேவை புரிந்தார்.

1943ல் கொழும்பு பல்கலைக்கழகத்தின் தமிழ்த்துறை தலைவராக பதவியேற்றார். அக்காலகட்டத்தில் இவர் பிரபலமான கல்விமானாகத் திகழ்ந்தார். 1943ல் இவருக்கு கொழும்பு மாநகரசபை மண்டபத்தில் ஒரு பாராட்டு விழா நடைபெற்றது. அதில் அக்காலத்தில் கல்வி அமைச்சராக இருந்த C.W.W. கன்னங்கரா, பல்கலைக்கழக துணைவேந்தர் அன்வர் ஜெனில்ஸ், அரசாங்க சட்டசபை உறுப்பினர் சு. நடேசுப் பிள்ளை ஆகியோருடன் கல்விமான் ரி.பி.ஜயா இன்னும் பல பிரபல்யமானவர்கள் கலந்து பாராட்டிப் பேசினர். 19.07.1947ல் ஒரு சனிக்கிழமை கொழும்பில் காலமானார். அவருடைய பூதவுடல் திங்கட்கிழமை மட்டக்களப்பிற்கு வந்து சேர்ந்தது. அங்கு எல்லா மதத்தினரும் இறுதி மரியாதை நிகழ்த்தினர். சிங்கள, பாளி மொழிகளிலே பிரார்த்தனைகள் இடம்பெற்றன. பகவத்கீதை வாசிக்கப்பட்டது. இஸ்லாமியர்கள் பிரார்த்தனை செய்தனர். விவிலிய நூலின் சில பக்கங்கள் ஒலிக்கப்பட்டன. திருவாசகம் ஓதப்பட்டது.

21.07.1947ல் மட்டக்களப்பு சிவானந்த வித்தியாலய எல்லையுள் அடிகளது பூதவுடல் கல்லறையில் சேர்க்கப்பட்டது.இவருடைய தகப்பனார் பெயர் சாமித்தம்பி என்பதாகும். தாயார் பெயர் கண்ணம்மையார். இவரது இயற்பெயர் மயில்வாகனன் என்பதாகும். 1897 இவர் பிறந்தார். தமிழ் பாடசாலையில் ஆரம்பமாயிற்று. 1902 கல்முனை மெதடிஸ்ட் பாடசாலையில் கல்வியைத் தொடர்ந்தார். 1908ல் கேம்பிரிட்ஜ் சர்வ கலாசாலை சீனியர் பரீட்சையில் சித்தி பெற்றார். 1911 – 1913ல் கொழும்பு ஆசிரியர் பயிற்சி கல்லூரியில் படித்து வெளியேறினார். 1914 – 1916ல் கொழும்பு பொறியியல் கல்லூரியில் (Technical College) படித்து விஞ்ஞான டிப்ளோமா பட்டம் பெற்றார். 1916ல் மதுரை தமிழ்ச்சங்க பண்டிதர் பரீட்சையில் சித்தி பெற்றார். 1917ல் யாழ்ப்பாணம் சம்பத்திரிசியார் கல்லூரியில் விஞ்ஞான பாட ஆசிரியராக சேவை செய்தார்.

1920 லண்டன் மாநகர பல்கலைக்கழக பி.எஸ்.சி (BSC) பரீட்சையில் சித்தி பெற்றார். மானிப்பாய் இந்துக் கல்லூரி அதிபராக அதே ஆண்டில் பதவியேற்றார். 1922 சித்திரை மாத நிறை மாத நாளன்று சுவாமி சிவானந்தரது சீடராகி துறவற தீட்சை பெற்று சுவாமி விபுலானந்தர் என்னும் துறவறப் பெயர் ஆரம்பமாயிற்று. 1925ல் காரைதீவு சாரதா வித்தியாலயத்திற்கு அடிக்கல் நாட்டினார். 06.11. 1926ல் மட்டக்களப்பு சிவானந்த வித்தியாலயத்திற்கு அடிக்கல் நாட்டினார். 1929ல் இந்த வித்தியாலயம் திறந்து வைக்கப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1930ல் இலங்கை இராமகிருஸ்ண சங்க பாடசாலைகளின் முகாமையாளராக (Manager) பதவி வகிக்க ஆரம்பித்தார். 26 பாடசாலைகள் இதன்கீழ் இருந்தன. 1931ல் அண்ணாமலைப் பல்கலைக்கழக தமிழ்ப் பேராசிரிராகப் பதவி ஏற்றார். அக் காலத்தில் இருந்து தமிழ் இசை பற்றி ஆய்வுகளை மேற்கொள்ளத் தொடங்கினார். 1933ல் அங்கிருந்து நீங்கி ஈழம் வந்து இசை பற்றிய ஆராய்ச்சியைத் தொடர்ந்தார்.

1937ல் திருக் கைலாய யாத்திரை மேற்கொண்டார். 1939ல் மட்டக்களப்பு தமிழ் கலை மன்றத்தை அமைத்தார். 1939 -1941ல் பிரபுத்த பாரத ஆசிரியராக மாயாவதி தவப்பள்ளியில் பணிபுரிந்தார். 1942ல் மதுரை முத்தமிழ் மாநாட்டுக்கு தலைமை வகித்தார். 1943ல் இலங்கை பல்கலைக்கழகத்தின் முதல் தமிழ்ப் பேராசிரியராக பதவியேற்றார். 20.06.1947ல் திருக்கொளம்பலூரில் " யாழ் நூல்" அரங்கேற்றம் நிகழ்ந்தது. 19.07.1947ல் இறைவனடி சேர்ந்தார்.

சிறு வயதிலிருந்தே முஸ்லீம்களுடன் அன்பாகப் பழகினார். பல மீலாத் விழாக்களிலே உரை நிகழ்த்தினார். சிவானந்த வித்தியாலயத்திலே இவர் காலத்திலே இந்து, முஸ்லீம், கிறிஸ்தவ மாணவர்கள் விடுதியில் தங்கி கல்வி பயின்றனர். முகம்மது நபி அவர்கள் வாழ்ந்த காலத்திலே திருநாவுக்கரச நாயனார் தமிழ் நாட்டிலே சைவத்தையும் தமிழையும் வளர்த்தார். என்று அடிகளார் சில இடங்களிலே கூறியுள்ளார்.

அடிகளார் தமிழ், ஆங்கிலம், சிங்களம், பாளி, வங்காளம், லத்தீன், கிரேக்கம், ஆகிய மொழிகளோடு அரபு மொழியும் அவருக்கு தெரிந்திருந்தது. உலகத்திலேயே அதிக சொற்களைக் கொணடது. தமிழ் மொழியாகும். தமிழ் -அரபு மொழி அகராதி ஒன்றை உருவாக்க வேண்டிய அவசியத்தை பலருடன் விவாதித்து வந்தார்.

1983ல் மதுரை காமராஜர் பல்கலைக்கழகத்தினால் இப்படியான ஒரு அகராதி வெளியிடப்பட்டது. இவர் கொழும்பு பல்கலைக்கழக பேராசிரியராக பணியாற்றிய பொழுது அரபு மொழிக்கென்ற ஒரு பதிய பகுதி ஆரம்பிக்கப்பட்டது. அடிகள் அரபு மொழி விரிவுரைகளை சென்று செவிமடுப்பார். திருகோணமலை ஆங்கில கலாசாலையிலும், மட்டக்களப்பு சிவாநந்தா வித்தியாலயத்திலும் தலைமையாசிரியராகப் பணிபுரிந்தார்.

யாழ்ப்பாணத்தில் இளைஞர் காங்கிரஸில் தலைமை பதவி வகித்தார். 1927ல் மகாத்மா காந்தி வந்தபொழுது அவரை இக் காங்கிரஸ் சார்பில் வரவேற்றார். சமயவாதியாக மட்டுமல்லாது பண்பாடு, கலாச்சாரம் ஆகியவற்றை வளர்க்கப் பாடுபட்டார். சட்ட சபைத் தேர்தல் காலத்திலே தமிழ் வேட்பாளருக்கு ஆதரவாக செயற்பாட்டார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பேராசிரியர் சு. வித்தியானந்தன் 1043- 1947 காலப் பகுதியில் சுவாமிகளிடம் மாணவராகவும் சக விரிவுரையாளராகவும் இருந்தார். தமது பல்கலைக்கழக வரலாற்றிலே முதலாவது தமிழ் சிறப்பு பட்டதாரியும் முதல் தமிழ் முதுமாணி பட்டதாரியும் இவரே.

அறிஞர் எ. எம்.எ அசீஸ் இலங்கையின் முதலாவது முஸ்லீம் சிவில் நிர்வாக உத்தியோகத்தரான இவர் அடிகளாரோடு நீண்டகால தொடர்புகளை வைத்திருந்தார். அடிகளுக்கு அம்மை நோய் வந்தபொழுது தன்னுடைய வீட்டிலே வைத்து பராமரித்து சுகம் பெறச் செய்தார். சிக்கல் நிறைந்த காலம் வரும் பொழுது அடிகளோடு தொடர்பு கொண்டதாக அசீஸ் கூறியுள்ளார். காரை தீவில் அடிகள் ஞாபகார்த்தமாக மணிமண்டபம் உள்ளது. இதற்குப் பல முஸ்லீம்களும் உதவியுள்ளார்கள்.

1943- 1947 காலப் பகுதியில் தமிழ் பேராசிரியராக கொழும்பில் பணியாற்றி வந்த சிங்கள மாணவருக்கும், விரிவுரையாளருக்கும் அவர்களின் விருப்பப்படி தமிழ் வகுப்புக்களினை ஆரம்பித்து வைத்தார்.

உசாத்துணை நூல்கள் :

விபுலானந்த அடிகளும் முஸ்லீம்களும் - ஏ. பிர்முகம்மது

குமரன் புத்தக வெளியீடு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பேராசிரியர் சு. வித்தியானந்தன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவர் 08.05.1924ல் தெல்லிப்பளையில் உள்ள வீமன்காமம் பகுதியில் பிறந்தார். 22.01.1989ல் கொழும்பில் அமரரானார். தகப்பனார் சட்டத்தரணி சுப்பிரமணியம். தாயார் பெயர் முத்தம்மா.அங்குள்ள தமிழ் பாடசாலையில் ஆரம்பக்கல்வியை பெற்றார். தொடர்ந்து தெல்லிப்பளை யூனியன் கல்லூரியிலும் யாழ். இந்துக் கல்லூரியிலும், யாழ் பரியோவான் கல்லூரியிலும் கல்வி பயின்றார். 1941ல் கொழும்பு பல்கலைக்கழகத்துக்கு தெரிவானார். தமிழ் பாடத்தை சிறப்பு பாடமாகப் பயின்று முதல் தரத்தில் (First Class) சித்தி பெற்றார். உதவி விரிவுரையாளராக சேவை செய்த இவர் 1950ல் லண்டன் சென்று கலாநிதி பட்டத்தைப் பெற்றார்.

1950ல் கொழும்பு கலாசார அமைச்சின் நாடகக் குழுவின் தலைவராக பதவி வகித்தார். அதே ஆண்டில் சாவகச்சேரியைச் சேர்ந்த திரு. நாகலிங்கம் அவர்களின் மகள் கமலாதேவியைத் திருமணம் செய்தார். இவருடைய மனைவி பல்கலைக்கழகத்தில் இவரது மாணவியாக கல்வி பயின்றவர். கொழும்பு பல்கலைக்கழகத்தில் இவரது தமிழ் பேராசிரியராக திகழ்ந்தவர் விபுலானந்தர் ஆவார்.

1960ல் உலக நாடுகள் பலவற்றுக்கு கல்வி சுற்றுலா சென்றார்.1970ல் இவருக்கு தமிழ் பேராசிரியர் பதவி வழங்கப்பட்டது. 1947ல் யாழ். பல்கலைக்கழகத்தின் இரண்டாவது தலைவராகப் பதவியேற்றார். 1979ல் யாழ்.பல்கலைக்கழகத்தின் முதல் உபவேந்தராக பதவியேற்றார். இதே ஆண்டில் இவரது மனைவி காலமானார். 1981ல் இரண்டாவது தடவையாகவும் யாழ்.பல்கலைக்கழகத்தின் துணைவேந்தராக பதவி வகித்தார்.1988ல் மூன்றாவது தலைவராகவும் பதவி வகித்தார்.

இவருக்கு நான்கு பிள்ளைகள். அவர்கள் யாவரும் உயர்கல்வி கற்று வெளிநாடுகளில் வாழ்கின்றனர். இவர்களில் பெண்கள். பேராசிரியர் தில்லைநாதன் இன்னும் பலர் இவரது மாணவராக நாட்டுக் கூத்து, நாட்டார் பாடல், நாடகம் ஆகிய துறைகளை வளர்க்கப் பாடுபட்டார். நாட்டுக்கூத்து அண்ணாவிமாரை கௌரவித்து மகாநாடுகளை நடத்தினார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பேராசிரியர் வித்தியானந்தன் எழுதிய, பதுப்பித்த நூல்கள்

1. இலக்கியத் தென்றல் (1953)
2. தமிழர் சால்பு (1954)
3. மட்டக்களப்பு நாட்டுப் பாடல்கள் (1960)
4. கலையும் பண்பும் (1961)
5. அலங்கார ரூபன் நாடகம் (1962)
6. மன்னார் நாட்டுப் பாடல்கள்(1964)
7. ஏன்டிறீக்கு என்பதோர் நாடகம்(1964)
8. மூவிராசாக்கள் நாடகம்(1967)
9. ஞானசவுந்தரி நாடகம் (1967)
10. கஞ்சன் அம்மானை (1976)
11. தமிழியற் சிந்தனைகள் (1979)
12. வித்தியானந்தம் (1984)

பேராசிரியர் வித்தியானந்தனால் தயாரிக்கப்பட்ட நாட்டுக் கூத்துக்கள்

1. கர்ணன் போர் (வடமோடி) – 1962
2. நொண்டி நாடகம் (தென்மோடி) – 1964
3. இராவணேசன் (வடமோடி)- 1965
4. வாலிவதை (வடமோடி) – 1968

உசாத்துணை நூல்:

பேராசிரியர் சண்முகதாஸ் எழுதிய நூல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பேராசிரியர் கார்த்திகேசு சிவத்தம்பி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

10.05. 1932ல் கரவெட்டியில் கார்த்திகேசு சிவத்தம்பி பிறந்தார். 06. 07. 2011ல் கொழும்பில் காலமானார். இவரது தாயாரின் பெயர் வள்ளியம்மை, வள்ளியம்மையின் தாயாரின் பெயர் வேலுப்பிள்ளை பார்வதிப்பிள்ளை. தகப்பனாரின் முழுப்பெயர் பொன்னுத்துரை கார்த்திகேசு. 13 வருடங்கள் வித்தியோதய பல்கலைக்கழகத்தில் விரிவுரையாளராக பணிபுரிந்தார். அவர் General Degree படித்தார். சரித்திரம், பொருளாதாரம், தமிழ்ப் பாடல்களை எடுத்தார். Third Class சித்தி தான் இவருக்குக் கிடைத்தது.

இவருடைய தகப்பன் பண்டிதர்,சைவப்புலவர். இவர் செல்வசந்நிதி கோவில் பக்தர், இவருடைய தாயாரும் அப்படியே. நண்பர்களின் ஊக்கங்களும் ஆதரவும் செயலில் நம்பிக்கையும்தான் சிரேஸ்ட பேராசிரியராக உயர்வதற்கு காரணமாயிருந்ததாக கூறுகின்றார்.

உலகப் புகழ்பெற்ற Havard பல்கலைக்கழகத்தில் கலாநிதிப் பட்டம் பெற்றார். (1967 – 1970). இவருடைய பேராசிரியர் உலக கம்யூனிச இயக்கத்தின் தீவிர ஆதரவாளர். இவரிடன் தான் பேராசிரியர் கைலாசபதி பயின்று கலாநிதிப் பட்டம் பெற்றார். அந்த பேராசிரியருடைய பெயர் GEORGE THOMSON என்பதாகும். இவரிடம் தமிழ் பேராசிரியர்கள் வானமாமலை போன்றோர் கல்வி பயின்றனர்.

இவர் எழுதிய நூல்களின் எண்ணிக்கை 70க்கும் அதிகம், 200க்கும் மேற்பட்ட ஆய்வுக் கட்டுரைகளினையும் எழுதியுள்ளார். தமிழ் நாட்டிலே இவரது ஆய்வுக் கட்டுரைகளில் நியூ செஞ்சரி தாபனம் இன்றும் புத்தகங்களாக வெளியிடப்பட்டு வருகின்றது. இவருக்கு ஐந்து சகோதரிகள், ஒரு தம்பி ஆகியோரே உடன் பிறப்புக்கள். இவரது பிள்ளைகள் பெயர் ரூபவதி, கிருத்திகா, தாரணி, வரதளி என்பதாகும்.

கொழும்பு பாராளுமன்ற மொழி பெயர்ப்பாளராக 1956 – 1961 காலப்பகுதியில் பணிபுரிந்தார். நாடக நடிகராக, நாடக நெறியாளராக செயற்பட்டிருக்கின்றார். இலங்கை வானொலி நாடகங்களில் நடித்திருக்கின்றார். இவரும் கைலாசபதியும் 1973 – 1974 காலப்பகுதியில் களனி வித்தியாலங்கார பல்கலைக்கழகத்தில் தொடர்பியல் (Communication) விரிவுரையாளராக பணிபுரிந்தனர்.

1956ல் கொழும்பு சாகிராக் கல்லூரியில் ஆசிரியராகப் பணிபுரிந்தார். இவரும் கைலாசபதியும் ஒன்றாக முற்போக்கு எழுத்தாளர் சங்கமாக கட்டியெழுப்புவதற்காக ஆவன செய்தார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவர் நடித்த விதானையார் வீடு என்ற நாடகம் 2 1/2 வருடங்கள் வானொலியில் ஒலிபரப்பாகி புகழ்பெற்றது. இவர் தான் மீனவர் சமூகத்தை சேர்ந்தவர் என்று கூறுகின்றார். அதை கரையார் என்றுதான் பேச்சு வழக்கில் உள்ளதாகக் கூறுகின்றார். கரவெட்டியில் வி. மகாலிங்கம் என்பவருடைய வீட்டில் மார்க்சிய வகுப்புக்கள் நடத்தின. தர்மகுலசிங்கம் என ஜெயம் அதை நிகழ்த்தினார். அதில் இரண்டு வகுப்புக்களுக்கு போனார்.

GCE A/L பரீட்சைக்கு நாடகமும் அரங்கியலும் ஒரு பாடமாக அறிமுகப்படுத்தப்பட்டது. இவர் தமிழ் நாடக அரங்கியல் பற்றி விரிவுரைகள் செய்தார். இவருடைய சிறிய தகப்பன் சூரன்போர் திருவிழாவில் சூரன் சகட்டுவது இவர்தான். காவடி ஆடுபவர்களுக்கு முள்ளு குத்துவது அவர்தான். இப்படி கூத்து கிராமிய நடனம் என்பவற்றை சிறுவயதிலேயே அவதானித்தார்.

சின்ன வயதில் கரவெட்டியில் உள்ள மாணிக்கவாசக வித்தியாலயத்தில் படித்தார். இவருக்கு சம்சுதீன் என்ற முஸ்லீம் ஆசிரியர் தமிழ்மொழியில் ஆர்வத்தை ஏற்படுத்தினார். இவரது தகப்பன் கணேமுல்லையில் ஆசிரியராக பணிபுரிந்த காலத்தில் M.M உவைஸ் இவரிடம் தமிழ் படித்தார். இதை அந்த அறிஞரே கூறியுள்ளார்.

பேராசிரியர் .வித்தியானந்தன் நண்பன் என்றும் ஆசிரியர் என்றும் இவர் புகழுரைக்கின்றார். பேராசிரியரை GUIDE PHILOSOPHER AND FRIEND என்று கூறுகின்றார்.

கைலாசபதியும் இவரும் 1952ல் இருந்து ஒன்றாக செயற்பட்டார்கள். உலக கம்யூனிச இயக்கம் சீனா சோசலிச உறவு பிரிந்தவுடன் இவர் கைலாசபதியுடன் இருந்த இலக்கிய உறவு பிரிந்ததாக கூறுகிறார். 50 வருடம் தான் (1933 – 1983) கைலாசபதி உயிர் வாழ்ந்தார். இவர் எமது நாட்டிலும் இந்தியாவிலும் அமெரிக்காவிலும் பல பல்கலைக்கழகத்திற்குச் சென்றிருக்கிறார்.

தமிழக அரசு இவருக்கு திரு. வி. க. நினைவுப் பரிசு கொடுத்தது. இது கவிஞர் கருணாநிதி காலத்தில் தான் கிடைத்தது. இலங்கை கம்யூனிச கட்சியின் அங்கத்தவராக செயற்பட்டிருக்கின்றார். 1956ல் பொன் கந்தையா பருத்தித்துறைத் தொகுதியில் வெற்றி பெற்றார். அவருக்காக தேர்தலில் வேலை செய்தார். தமிழீழ போராட்டத்தின் உச்சக்கட்டத்தில் அவர்களை ஆதரித்தார். வல்வெட்டித்துறை பிரஜைகள் குழுத் தலைவராக செயற்பட்டிருக்கிறார்.

இதுவரை நீங்கள் வாசித்ததெல்லாம் அவரே கூறிய வார்த்தைகள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உசாத்துணை :

1. ஞானசேகரன் அவர்கள் தனது ஞானம் சஞ்சிகைக்கு கண்ட நேர்காணல்களில் இருந்து தொகுக்கப்பட்டது. 160 பக்கங்கள் இது புத்தகமாக வெளிவந்துள்ளது.
2. பல நேர்காணலின் தொகுப்பு நூல்.

அவர் பணி செய்த பல்கலைக் கழகங்கள்.

1. கிழக்கிலங்கைப் பல்கலைக்கழகம்(வருகைப் பேராசிரியர்)
2. HAVARD பல்கலைக்கழகம்(ஆய்வு PHD)
3. பேர்கிளியிலுள்ள கலிபோர்னியாப் பல்கலைக்கழகம் (வருகைப் பேராசிரியர்)
4. தஞ்சாவூர் பல்கலைக்கழகம் (வருகைப் பேராசிரியர்)
5. புதுடெல்லியிலுள்ள ஜவகர்லால் நேரு பல்கலைக்கழகம் (ஆய்வுPHD)
6. அனைத்துலக தமிழாராய்ச்சி நிலையம் (ஆய்வாளர்)
7. சுவீடன் உப்சலா பல்கலைக்கழகம் (ஆய்வாளர்)
8. கேம்பிரிட்ஜ் பல்கலைக்கழகத்தின் ஆசிய மையம்
9. யாழ் பல்கலைக் கழகம் (1978 – 1996)
10. பேராதனைப் பல்கலைக்கழகம் (இளநிலை முதுநிலைப் பட்டங்கள்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பேராசிரியர் கனகசபாபதி கைலாசபதி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

05.04.1933ல் மலேசியாவில் பிறந்த இவர் 06.12.1982ல் கொழும்பில் காலமானார். இவர் கொழும்பு றோயல் கல்லூரி, யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி ஆகியவற்றில் கல்வி பயின்றார். பேராதனைப் பல்கலைக் கழக பட்டதாரியான இவர் தமிழைச் சிறப்புப் பாடமாகப் பயின்று முதல் தரத்தில் சித்தி பெற்றார். லண்டன் பர்மிங்காம் பல்கலைக்கழகத்தில் கலாநிதிப் பட்டத்தைப் பெற்றார்.

இவருடைய பேராசிரியராக அங்கு திகழ்ந்தவர் புகழ்பெற்ற கிரேக்க மொழிப் பேராசிரியர் ஜார்ஜ் தாம்சன் (1903 – 1987) ஆவார். இவர் சர்வதேச கம்யூனிச இயக்கத்தின் ஆதரவாளர். இவரிடம் பயின்றவர் சிலர். பேராசிரியர் கார்த்திகேசு சிவத்தம்பி, தமிழகத்தைச் சேர்ந்த யு. ஆர். ஆனந்தமூர்த்தி இன்னும் சிலர்.

இவர் ஆய்வுக்கு எடுத்துக் கொண்ட விடயம் (TAMIL HEROIC POETRY) தமிழிலக்கியத்தில் வீரயுகப் பாடல்கள் என்பதாகும். இவர் இடைக்காடு அச்சுவேலியைச் சேர்ந்த மாணிக்க இடைக்காடரின் மகளைத் திருமணம் செய்தார். சர்வமங்களம் என்பது அவர் பெயர். இவர்களுக்கு சுமங்களா, பவித்திரா என்று இரண்டு பெண்பிள்ளைகள் உள்ளனர். இவர்கள் மூவரும் பொதுமக்கள் சார்ந்த விடயங்களில் பணியாற்றி வருகின்றனர்.

பேராசிரியர் கணபதிப்பிள்ளை, பேராசிரியர் சு. வித்தியானந்தன் ஆகியோரிடம் கல்வி பயின்றார். பல்கலைக் கழகத்தில் பேராசிரியர் சிவத்தம்பியின் சக மாணவராகவும் நண்பராகவும் திகழ்ந்தவர். இருவரும் முற்போக்கு எழுத்தாளர் சங்கத்தைக் கட்டியெழுப்புவதில் நன்றாகப் பாடுபட்டனர். சர்வதேச கம்யூனிச இயக்கத்தில் 1967ல் ஒரு பிளவு வந்தது. இது சோவியத் யூனியனுக்கும் சீனாவுக்கும் இடையே ஏற்பட்ட பிளவு ஆகும். அதன் பின்பு சீன ஆதரவாளராகச் செயற்பட்டார். பேராசிரியர் கைலாசபதியால் எழுதி வெளியிடப்பட்ட நூல்கள் யாழ். பொது நூலகத்தில் உசாத்துணைப் பகுதியில் காணப்படுகின்றது. இவர் கலாநிதிப் பட்டம் பெற்றுக் கொண்ட TAMIL HEROIC POETRY என்ற புத்தகமும் இங்கு காணப்படுகின்றது.

யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தின் முதலாவது தலைவராகவும் திகழ்ந்தார். யாழ் பல்கலைக்கழகத்தை கட்டியெழுப்புவதற்கு அரும்பாடுபட்டார். இவருக்கு அடுத்தபடியாக பேராசிரியர் சு. வித்தியானந்தன் திகழ்ந்தார். இவர் அப்பொழுது தமிழ்ப் பேராசிரியராகவும் திகழ்ந்தார். பல்கலைக்கழகப் பட்டம் பெற்ற பின்பு கொழும்பு தினகரன் பத்திரிகையின் பிரதம ஆசிரியராக 1957ல் இருந்து திகழ்ந்தார். அதில் இலங்கை முற்போக்கு எழுத்தாளர்களின் கதைகள், தொடர் நாவல்கள், கவிதைகள், கட்டுரைகள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆகியவற்றை வெளியிட்டார். "நாடும் நாயன்மாரும்", "பேரரசும் பெருந் தத்துவமும்", "ஆழ்வார்கள் இயற்றிய பக்தி இலக்கியம்" ஆகியவற்றைப் பற்றி இவர் எழுதிய கட்டுரைகள் சில புகழ்பெற்றன.

களனி வித்தியாலங்கார பல்கலைக்கழகத்தில் இவரும் பேராசிரியர் சிவத்தம்பியும் தொடர்பியல் (COMMUNICATION) பாடத்தில் விரிவுரைகள் நிகழ்த்தினார். 1952ல் இருந்து 1973 வரை பேராசிரியர் சிவத்தம்பியுடன் பலமான நட்பு இவருக்கு இருந்தது. தமிழ் இலக்கியம் பற்றிய இவரது ஆய்வு நூல் மிகவும் பிரபலமானது. தமிழகத்தில் பல்கலைக்கழக மாணவர்கள் தான் ஏற்றுக் கொண்டார்கள். தொடர்புகளை ஏற்படுத்தினர். இருவரும் அங்கு சென்று பல தடவை விரிவுரைகள் செய்தார்கள்.

அவர் இறந்தபொழுது யாழ். பல்கலைக்கழக மாணவர் பேரவை அவரை ஒரு வீரன் என்று பாராட்டியுள்ளது. கொழும்பு பொது நூலகம் அவரின் ஆலோசனைகளைக் கேட்டு செயற்பட்டது. அவர் எழுதிய நூலுக்காக இலங்கை சாகித்திய மண்டல பரிசைப் பெற்றவர்.

இதன்மேல் நீங்கள் வாசிக்கப்போவது அவரது நண்பர் பேராசிரியர் சிவத்தம்பி ஒரு நீண்ட கட்டுரையில் எழுதியவையாகும். இருவரும் குடும்ப நண்பர்களாகவே பழகினார்கள். கைலாசபதியின் வானொலி நாடகங்களையும் எழுதினார். (LADISLAUS FOSAER) திறந்த கல்லறை என்ற மொழிபெயர்ப்பு நாடகம் வெகுவாகப் பாராட்டப்பட்டது. இவர்களுக்கும் இலங்கை வானொலி நாடகங்களை நெறியாள்கை செய்து நடித்த சானா என்கின்ற சண்முகநாதனுக்கும் இனிய தொடர்பு இருந்தது. சானாவின் என்கின்ற சண்முகநாதனுக்கும் இனிய தொடர்பு இருந்தது. சானாவின் மகளின் மகன்தான் சூரியன் FM அறிவிப்பாளர் லோசன் என்கின்ற லோசனனாவார். கூறப்பட்ட நாடகத்தில் பேராசிரியர். சிவத்தம்பி, நந்தி, சிவஞானசுந்தரம் போன்றோரும் இன்னும் சிலரும் நடித்தனர். சர்வமங்களம் கைலாசபதி அவர்களை மாணவர் காலத்தில் இருந்தே அறிந்து வைத்திருந்தார். தகப்பனாகிய மாணிக்க இடைக்காடார் இலங்கை அரசாங்க புள்ளி விபரத் திணைக்களத்தில் உயர் பதவி வகித்தவர். அரசாங்க சேவையில் ஓய்வு பெற்ற பின்பு WHO உலக சுகாதார ஸ்தாபனத்தில் பணியாற்றினார்.

தனது சிறுவயதிலேயே தனது தாயாரை கைலாசபதி இழந்தார். தனது இரண்டு பெண் பிள்ளைகளையும் ஆழமாக நேசித்தார். அவர் எழுதி வெளியிட்ட ஒரு நூலைத் தனது மகள்மார் இருவருக்கும் சமர்ப்பணம் செய்தார். பல்கலைக்கழகக் காலத்தில் பேராசிரியர் கணபதிப்பிள்ளை எழுதிய இரு நாடகங்களிலே இருவரும் நடித்தனர். பேராசிரியர் கைலாசபதியின் தகப்பனார் மலேசியாவில் உத்தியோகம் பார்த்தவர். இரண்டாவது உலக மகா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யுத்தம் முடிவடைந்த பின்னர் இவர்கள் குடும்பம் இலங்கைக்கு வந்தது. இவரின் சகோதரர் கொக்குவில் ஆனைக் கோட்டை வீதியில் வசித்து வருகிறார். இவர் தினகரனில் வெளியிட்ட சில்லையூர் செல்வராசனின் " தலைவர்கள் வாழ்கமதே" என்ற கவிதைத் தொடரும், அ.ந. கந்தசாமியின் மனக்கண் தொடர்கதையும், மலையகத்தைச் சேர்ந்த என்.எஸ். எம். இராமையா அவர்களின் ஆக்கங்களின் ஆக்கங்கள் போன்றனவும் புகழ்பெற்றன. இவருடைய நான்கு நாடுகளில் நாற்பது நாட்கள் என்ற பயணக் கட்டுரையும் தினகரனில் ஞாயிறு பதிப்பில் தொடராக வெளிவந்து புகழ்பெற்றது.

இவரின் முயற்சியால் தினகரன் தமிழ்விழா புகழ்பெற்றது. இதற்கு தமிழக நடிகர் சிவாஜிகணேசன் சிறப்பு விருந்தினராக கலந்திருந்தார். தினகரன் ஆகக்கூடிய பிரதிகளை வெளியிடும் தமிழ்ப் பத்திரிகையாகவும் இருந்தது. ஏரிக்கரை பத்திரிகை முகாமைத்துவப் பணிப்பாளர் இவரை மிகவும் பாராட்டினர். அதே காலத்தில் புகழ்பெற்ற தாசி வித்தாச்சி ஒப்சேவர் பத்திரிகையின் ஆசிரியராக இருந்தார். சவாரித்தம்பர் என்ற தொடர் கார்ட்டூன் சித்திரங்கள் புகழ்பெற்றது. இதை வரைந்தவர் சிவாஜி என்கின்ற சிவஞானசுந்தரமாவார். இவர் தினகரன் பத்திரிகையில் ஆசிரியர் பதவி ஏற்க முன்பு இவரின் கட்டுரைகள் வீரகேசரி, ஈழநாடு (யாழ்) ஆகிய பத்திரிகைகளில் வெளிவந்தன.

இவரது TAMIL HEROIC PEOTRY என்ற கலாநிதிப் பட்டத்துக்கான ஆய்வுக் கட்டுரையை ஒக்ஸ்போர்ட் பல்கலைக்கழகம் புத்தகமாக வெளியிட்டது. இந்த நூலினை மேல்நாட்டு அறிஞர்களும்,சிங்கள அறிஞர்களும் பெரிதும் விமர்சித்தனர். "கைலாசபதியும் முற்போக்கு இலக்கியமும்" என்ற நீண்ட கட்டுரை இலங்கை பிரபல முஸ்லீம் அறிஞர் அவர்களுடைய கட்டுரையில் கீழ்க்கண்ட கைலாசபதியின் சிந்தனைகளைக் கீழே தருகிறோம்.

"விமர்சனம் என்பது உலகை விவரிப்பது மாத்திரமின்றி அது உலகத்தை மாற்றியமைப்பதற்கு உழைக்கும் அதன் நேச சக்திகளும் அறிவாயுதமாக இருத்தல் வேண்டும். "கைலாசபதியின் "பண்டைய தமிழ் வாழ்வும் வழிபாடும்" என்ற நூலில் கீழ்க் கண்டவாறு கூறுகின்றார். " வணிகமும் பிறநாட்டு வணிகமும் அக் காலத்தில் சிறந்திருந்தன எனக் கண்டோர் அதனுடைய பிரதிபலிப்பே மூவேந்தரையும் இணைக்கும் காப்பிய முயற்சியாகும்."

தமிழுணர்வைப் பற்றிக் கூறும்போது " புறச்சமயத்தவருக்கு எதிராகக் கொடியை உயர்த்திப் பிரச்சார முழக்கம் சிவனடியாரும், ஆழ்வாரும் தமிழகமெங்கும் தமிழுணர்ச்சியையும், தமிழ் நிலப் பற்றையும் பெருக்கினர். தமிழ் மன்னர்களான பல்லவர் ஆட்சி, பிற மொழிகள் அம் மன்னரால்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உயர்த்தப்பட்டதுவும், பல்லவர் காலத்திலே தமிழ் நாட்டிலே ஒருவிதமான தேசிய உணர்வு தோன்றக் காரணமாக இருந்தன எனக் கொள்ளலாம்".

சோழர் காலத்தில் காணப்பட்ட சமுதாய அமைப்பும், அரசியல் முறையும், வாழ்க்கை ஒழுங்கும் சித்தாந்தம் காட்டும் இறைவனில் சிவனில் - பதியில் தமது சாயலில் பொறித்துள்ளன என நாம் நிரூபிக்க முடியுமாயின் பேரரசுக்கும் பெருந்தத்துவத்துக்குமுள்ள தொடர்பு மேலும் தெளிவாகும். இருபதாம் நூற்றாண்டின் தமிழ் இலக்கிய வளர்ச்சியில் முக்கிய பங்கை பேராசிரியர் கைலாசபதி வகித்தார் என்பது முக்கியமானது.

பேராசிரியரின் தகப்பன் ஊரெழு பிள்ளையார் கோவிலடியைச் சேர்ந்தவர். தாயாரின் பெயர் நாகமுத்து தில்லைநாயகி. இவர் வாழ்ந்த வீடு யாழ் நகரில் உள்ள ஐந்து சந்திப் பகுதியில் உள்ளது. இவர்கள் வாழ்ந்த வீட்டின் பெயர் "தில்லைவாசா". யாழ் இந்துக் கல்லூரியில் கல்வி கற்கும் போது பேராசிரியர் இங்குதான் வாழ்ந்தார்.

பேராசிரியர் எழுதிய சில புகழ்பெற்ற கட்டுரைகள் கீழ்வருமாறு:

1. இன்றைய தமிழ் இலக்கியம் - புதிய போக்குகள்
2. தமிழில் குழந்தைக் கவிகள்
3. தமிழ் நாவல் வரலாறு சில குறிப்புகள்
4. கோயில் தத்துவமும் சமூக வாழ்க்கையும்

பல்கலைக்கழகத்திற்கு அப்பால் அவர் பல நிறுவனங்களில் உறுப்பினராகவும் தலைவராகவும் கடமையாற்றியுள்ளார். அவை வருமாறு:

1970 – யுனெஸ்கோவுக்கான தேசிய ஆணைக்குழு

1970 - இலங்கைப் பாடநூல் ஆலோசனைக் குழு

1973 - இலங்கைப் பல்கலைக்கழக மக்கள் தொடர்பு

1973 - இலங்கை வானொலி தமிழ் நிகழ்ச்சி ஆய்வுக்குழு

1972 – 76 : தலைவர் - இலங்கைப் பல்கலைக்கழகத்தின் இலக்கியக் குழு, நாட்டியக்குழு

1978 –சீனப் பயணம், தமது குடும்பத்தினருடன் - மனைவி, பிள்ளைகளுடன்(சுபமங்களா, பவித்திரா) சீனா சென்று வந்தார். இவ்வனுபவங்களை சர்வமங்களத்துடன் இணைந்து " மக்கள் சீனம் : காட்சியும் கருத்தும்" என்ற நூலையும் எழுதி வெளியிட்டார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உசாத்துணை நூல்கள்

1. கொழும்பு ஏரிக்கரை பத்திரிகை 7 – 8 டிசம்பர் 1982- தினகரன்
2. பேராசிரியர் கார்த்திகேசு சிவத்தம்பி நேர்காணல் நூல் வெளியீடு தி. ஞானசேகரன் கொழும்பு – 06
3. பேராசிரியர் கைலாசபதி பற்றி பேராசிரியர் சிவத்தம்பி எழுதிய நீண்ட கட்டுரை
4. முஸ்லீம் சரித்திர ஆய்வாளர் முகமது சமிம் பேராசிரியர் பற்றி எழுதிய நீண்ட கட்டுரை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கைலாசபதியின் நூல்கள்

இரு மகாகவிகள்	- 1962
பண்டைய தமிழர் வாழ்வும் வழிபாடும்	- 1966
தமிழ் நாவல் இலக்கியம்	- 1968
Tamil Heroic Poetry	- 1968
ஒப்பியல் இலக்கியம்	- 1969
அடியும் முடியும்	- 1970
கவிதை நயம் (இ. முருகையனுடன் இணைந்து எழுதியது)	- 1970
இலக்கியமும் திறனாய்வும்	- 1972
பாரதி நூல்களும் பாடபேத ஆராய்ச்சியும்	- 1973
மக்கள் சீனம் : காட்சியும் கருத்தும் (திருமதி .கைலாசபதியுடன் இணைந்து எழுதியது)	- 1979
சமூகவியலும் இலக்கியமும்	- 1979
திறனாய்வுப் பிரச்சனைகள்	- 1980
நவீன இலக்கியத்தின் அடிப்படைகள்	- 1980
இலக்கியச் சிந்தனைகள்	- 1983
பாரதி ஆய்வுகள்	- 1984
The RelationofTamil and Western Literature	- 1984
ஈழத்த இலக்கிய முன்னோடிகள்	- 1986
OnArt and Literature	- 1986
On Bharathi	- 1987
சர்வதேச அரசியல் நிகழ்வுகள் : 1979 – 1982	- 1992
முன்னுரைகள்	- 2004
நாவலர் பற்றி கைலாசபதி	-2005
தமிழ் பற்றி கைலாசபதி	- 2005
தமிழ் வீரநிலைக் கவிதை	-2006

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நவீன இலக்கியத்தின் அடிப்படைகள்

- பேராசிரியர் க. கைலாசபதி

நவீன இலக்கியத்தின் அடிப்படைகள் என்னும் தலைப்பை நோக்கும் பொழுதே இரு கருத்துப் படிவங்கள் இதிலே சம்பந்தப்பட்டிருப்பது தெளிவாகி விடுகின்றது. காலம், அடிப்படைகள் ஆகிய இரண்டும் நமது கவனத்திற்கு உரியன. இலக்கிய வரலாற்று ஆசிரியர்கள் தமது நீண்ட இலக்கிய வளர்ச்சியைப் பல்வேறு காலப்பகுதிகளாக வகுத்திருப்பதைப் பலரும் அறிவர். சங்ககாலம், சங்கமருவிய காலம், பல்லவர் காலம், ஆங்கிலேயர் காலம்,சோழர் காலம், விஜயநகர நாயக்க மன்னர் காலம், ஐரோப்பிய காலம், ஆங்கிலேயர் காலம், விடுதலைக் காலம் என்று வகுத்துரைப்பது பெருவழக்கு என்று கூறலாம். எனினும், இப்பாகுபாடும் பெயர்களும் முடிந்த முடிபானவை என்பதற்கில்லை. பழங்காலத்திலிருந்து நிலவி வரும் அரசுமுறை அடிப்படையிலே, நாட்டை ஆண்ட அரச வம்சத்தவர். இனத்தவர் ஆகியோர் பெயரால் வரலாற்றுக் காலப்பிரிவுகளை அமைப்பதனையே இப்பாகுபாடு காட்டுகின்றது. (இலக்கியப் பண்புகளின் அடிப்படையிலும், பொருளாதார – சமூகவியலின் அடிப்படையிலும், காலப்பாகுபாடுகள் வகுத்தல் கூடும். இலக்கியத்திற்கும் சமுதாய வளர்ச்சிக்கும் உள்ள தொடர்பின் தன்மையை ஒருவர் புரிந்து கொள்ளும் வகையைப் பொறுத்துக் காலப்பாகுபாடுகளும் பெயர்களும் அமையும் என்பது கூறாமலே விளங்கும்).

இவ்வாறு, பல்லவர் காலம் என்றோ, சோழர் காலம் என்றோ அரச வம்சத்தவர் பெயரால் காலங்களுக்குப் பெயரிடப்பட்ட போதும், வெவ்வேறு காலப்பகுதிகளில் மொழி - இலக்கியம் என்பவற்றில் காணப்படும் சிறப்பியல்புகளின் வேறுபாடே காலப்பாகுபாட்டிற்கு முக்கியமான காரணம் என்பதனையும் நாம் மனங்கொள்ள வேண்டும். தமிழ் இலக்கிய வரலாற்றாசிரியர்களிற் பெரும்பாலானோர், மொழி இலக்கியம் இவற்றை மாத்திரம் நோக்கி, அவற்றுள் சிற்சில வேறுபாடுகளை அவதானித்துக் கால அடைவில் அவற்றை அமைத்துக் காட்ட முனைவர் சமூகவியல் அம்சங்கள் இதுகாலவரை போதிய கவனம் பெற்றில.

ஆனால், கடந்த சில வருடங்களாகத் தமிழாராய்ச்சியில் ஏற்பட்டு வரும் மாற்றம் காரணமாக,இலக்கிய வரலாறு என்பது அடிப்படையிலே இரண்டையும் பிரித்தெடுத்துக் தனித்தனியே நோக்குவதோ ஆராய்வதோ பொருத்தமற்ற செயல்கள் என்பதும் புலனாகி வருகின்றன. ஓர் வகையில் பார்க்கப்போனால், இக் கருத்து மாற்றமே நவீன தமிழ் இலக்கியத்தின் குறிப்பிடத்தக்க அம்சங்களில் ஒன்று எனக் கூறலாம். இதனை ஒரு உதாரணம் மூலம் சித்தரித்து விளக்குவது பயனுள்ளது என எண்ணுகிறேன். நூற் பதிவிலும் மூல பாடத் திறனாய்விலும் (Tex-tual

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Criticism) முன்னோடியாய் (உ.வே. சாமிநாதையருக்கு முற்பட்டு விளங்கிய சி.வை. தாமோதரம்பிள்ளை (1832- 1901) அவர்கள் 1881ம் ஆண்ட **வீரசோழியம்** என்ற இலக்கண நூலைப் பக்குவமாகப் பரிசோதித்துப் பதிப்பித்தார். சென்னைப் பல்கலைக்கழகத்தின் முதல் தொகுதி (1858) பட்டதாரிகளுள் ஒருவரும், பத்தொன்பதாம் நூற்றாண்டிலே தமிழாராய்ச்சியில் சிற்சில புதுத்திருப்பங்கள் ஏற்படக் காரணமாயிருந்தவர்களில் ஒருவரும், தலையாய தமிழ்த் தொண்டர்களில் ஒருவரும், ஆய்வறிவாளருமான தாமோதரம்பிள்ளை, தாம் பதிப்பித்த அந்நூலின் பதிப்புரையிலே, நூலாசிரியர் புத்த மித்திரனாரைப் பற்றிச் சில செய்திகள் கூறுமுகமாகத் தமிழிலக்கிய வரலாற்றைப் பருந்துப் பார்வையாக விவரித்தார். பேராசிரியர்.எஸ். வையாபுரிப்பிள்ளை குறிப்பிட்டிருப்பது போன்று,"தமிழிலக்கிய சரிதத்தைக் காலமுறைப்படி பாகுபாடு" செய்ய முயன்றவர்களுள் சி.வை. தாமோதரம்பிள்ளைக்கு முதலிடம் உண்டு. அவர் தமிழிலக்கிய வரலாற்றினை ஒன்பது பகுதிகளாக வகுத்தார். அபோதகாலம், அக்ஷர காலம், இலக்கண காலம், சமுதாய காலம், அநாதர காலம்,சமணர் காலம், இதிகாச காலம், ஆதீன காலம், தற்காலம் என – அவர் வகுத்தபோது அரசியல் நிறுவனங்களை நோக்கியன்றி மொழி இலக்கியப் பண்புகளையே சிறப்பாக மனங்கொண்டார். எனலாம். தமிழ் நூல்களைக் கால அடைவில் நோக்கிக் காரணகாரியத் தொடர்புடன் விளக்கும் நவீன முறையை அவர் கடைப்பிடித்தார். துவக்கி வைத்தார். என்றும் கூறுதல் பொருந்தும்! உதாரணமாக, இதிகாச காலம், ஆதீன காலம் என்று அவர் வகுத்த காலப்பகுதிகளிலேயே அதுகாலலைரை காலங்கடந்தனவாகக் கருதப்பட்டு வந்த " புராணேதிகாசங்கள், சமயசாஸ்திர ஸ்தலமான்மியங்கள்" எழுந்தன எனக் கூறினார். தாமோதரம்பிள்ளையின் காலப் பாகுபாடு இன்று பார்க்கும் போது பல குறைபாடுடையதாய்த் தோன்றினும்,வரலாற்றுணர்வும் கால நிர்ணய அறிவும் அவருக்கிருந்தன. என்பதை எவரும் மறுக்கவியலாது. அன்றைய நிலையில் அது ஆராய்ச்சி நெறியின் பாற்பட்டதாகவே இருந்தது.

ஆனால் இப்பண்புகளே வீரசோழியம் பதிப்பு வெளிவந்த காலத்திலும் அதனையடுத்து கடுமையான கண்டனத்திற்கு ஆளாயின. உதாரணமாக திருவாவடுதுறையாதீன வித்துவ சிரோமணியாக வீற்றிருந்த யாழ்ப்பாணத்துக் கோப்பாய்ச் சபாபதிநாவலர் (1844- 1903) தாமோதரம்பிள்ளையின் ஆராய்ச்சி முறைகளையும் முடிபுகளையும் மறுப்பதை முதல் நோக்கமாகக் கொண்டே 1889ல் **திராவிடப் பிரகாசிகை** என்னும் நூலை வெளியிட்டார். தாமோதரம் பிள்ளை தமிழ் மொழியையும் அதிலுள்ள இலக்கண இலக்கிய சாத்திர நூல்களையும் கால முற்பிற்பாடு கருதிக் குறிப்பிட்ட ஒரு வரிசைக் கிரமத்தில் அமைத்து அமைதி கண்டு காட்டினார். சபாபதி நாவலரோ, தமிழின் தெய்வப் பழமை மரபியல், இலக்கிய மரபியல், சாத்திர மரபியல், ஒழிபியல் என ஐவகைப் பிரிவாக நூலை வகுத்துத் தொன்று தொட்டு வழங்கி வரும் நூல்களுக்குள்ளே கால

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முற்பிற்பாடு காணுதல் "வேத வழக்கொடு மாறுபடுஞ்செயல் என்று மீண்டும் மீண்டும் கூறிச் சென்றார். நூற்பாயிரத்திலே சபாபதி நாவலர் எழுதியுள்ள சில வாக்கியங்கள் அவரது மனப்பாங்கையும் நோக்கு நிலைமையையும் தெளிவுறுத்துகின்றன.

> தமிழின் தொன்மை மரபினையும், அதனிலக்கண மரபினையும் இலக்கிய மரபினையும், சாத்திர மரபினையும், நல்லாசிரியர் வழிநின்று தெளிதரற்குரிய நற்றவ அறிவுமாட்சியுடையரல்லாதார் சிலர், இக் காலத்து தாந்தாம் அறிவாற்றல் முறை பிறழக் கொண்டு தமிழ் மொழியினும் பிற மொழியினும் பலவாறெழுதி வெளியிட்டு வரம்பழித்தலாயினும், அவர் உரையின் பொய்ம்மை தேறமாட்டாத பேதை நீரார், அவற்றினை மெய்யெனக் கொண்டு தமிழ் நல்லாசிரியர் தெய்வப்புலமை மாட்சிமையினையும் அவர் நூலுரைகளின் தாரதம்மிய முறையினையும் வரன்முறை போற்றாது புறம்பழித்துத் தமக்கும் பிறர்க்குங் கெடு சூழுதலானும், தமிழ் உலக மற்றவற்றின் உண்மை தேறி உறுதிப் பயனெய்துதற் பொருட்டு அத்திறனெல்லாம் விளக்கித் திராவிட பிரகாசிகையென்னும் பெயரினால் இவ் வசன கிரந்தம் இயற்றுவே மாயினோம்.

சபாபதி நாவலரின் இக்கூற்று பலவழிகளில் வகை மாதிரிக்குப் பொருத்தமாய் உள்ளது. மரபுவழி வந்த கடின நடையில் சபாபதி நாவலர் எழுதியுள்ள இவ்வுரைப் பகுதியிலே, இடம் பெற்றிருக்கும் கருத்துக்கள் சில ஊன்றிக் கவனிக்கத் தக்கன.

இலக்கண இலக்கியம் என்பன பற்றி எழுத முற்படுவோர் நற்றவ வாய்ப்பு உடையராய் இருக்க வேண்டும் என்றும், மரபுவழிவரும் நல்லாசிரியர் வழி நின்று அறிவைப் பெறல் வேண்டும் என்றும், வழி வரும் முறையை மாற்றக் கூடாது என்றும், சபாபதி நாவலர் முற்கூறிய மேற்கோளிலே வற்புறுத்துகிறார். மாற்றம் இன்றித் தேங்கி நிற்கும் சமுதாயங்களிலேயே மரபு அடிப்படைப் பண்பாக வலியுறுத்தப்படுவது இயல்பு. இதற்கு எடுத்துக் காட்டாகத் தொல்காப்பியச் சூத்திரங்கள் பல அமைந்துள்ளன. "மரபு நிலை திரியா மாட்சி" என்றும்,"மரபு நிலை திரிதல் செய்யுட்கில்லை" என்றும் ,"மரபு நிலை திரியில் பிறிது பிறிதாகும்" என்றும் இன்னும் பல விதங்களிலும் மரபின் நிலைபேறு குறித்துத் தொல்காப்பியர்,"மரபு" என்னும் செல்லைப் பல விடயங்களில் வழங்கியது மட்டுமன்றி, அது குறித்துத் தனியொரு இயலும் அமைத்துள்ளார். பின் வந்த உரையாசிரியர்கள், மூல நூலாசிரியரைப் பார்க்கிலும் கடுமையான மரபுணர்ச்சியுடன் கருமமாற்றினர். அவர்கள் மரபிலேயே சிந்தித்துச் செயலாற்றியவர் சபாபதி நாவலர். இப் பண்புகளுக்கு மாறாக தனது கல்வியையும் சுய சிந்தனையையும் ஆராய்ச்சியையும் ஆதாரமாகக் கொண்டு மரபு கூறுஞ் செய்திகளையும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மறுத்துரைக்க வேண்டுமிடங்களில் தயங்காது உரைத்தார். தாமோதரம்பிள்ளை மூலபாடத் திறனாய்வு வளர்ச்சிக்குப் பெரும்பங்களித்துள்ள தாமோதரம்பிள்ளை **சூளாமணி** பதிப்புரையில் (1889) கூறியுள்ள சில கருத்துக்கள் அவரது சுதந்திரப் போக்கையும் அவசியமேற்படின் மரபையும் நிராகரித்து உண்மையை நாடும் மனோபாவத்தைய் ஐயத்துக்கிடமின்றி காட்டுகின்றன. சாதாரணமாக மூல பாடத் திறனாய்வாளர் ஒரு நூலின் பல பிரதிகளைப் பரிசோதித்து ஏதாகிலும் ஒரு பிரதியை ஆதாரமாகக் கொண்டே மூலபாடத்தைத் தீர்மானிப்பர். அதாவது பிரதிகளில் பிழைகள் மலிந்திருப்பினும் சரியான பாடமும் அப்பிரதிகளிலேயே இருக்கும் என்பது கருதுகோள். ஆயினும் மேனாட்டிலே மூலபாடத்திறனாய்வின் வளர்ச்சியுற்ற காலத்தில் புதிய கருத்துப் பிறந்தது. அதாவது, பிரதிகள் அனைத்திலுமே சரியான பாடம் கிடைக்காமற் போகக் கூடும். என்றும், பதிப்பாசிரியர் ஆராய்ச்சியின் அடிப்படையில் பிரதிகளின் ஆதாரமின்றியும் பாடத்திருத்தத்தை மேற்கொள்ளுதல் சாலும் என்றும் சில அறிஞர்கள் கருதினர். ஆயினும் இது தவிர்க்க இயலாத சந்தர்ப்பங்களில் அருமையாகவே கடைப்பிடிக்கப்பட வேண்டிய செயல் என்பது பொதுவான நம்பிக்கை தமிழிலே மூலபாடத்திறனாய்வு தவழும் பருவத்திலிருந்த வேளையிலே தாமோதரம் பிள்ளை அந்நூதனமானதும் துணிகரமானதுமான முயற்சியை மேற்கொண்டது. அவரது ஆராய்ச்சி முதிர்ச்சியையும் ஆய்வறிவுப் போக்கையும் துல்லியமாக்குகிறது. அவரது கூற்றைப் பார்ப்போம்.

> காலாந்தரத்தில் ஏடெழுதுவோராற் பெருகிப் பெருகி வந்த விழைகளினாற் காவியங்கள் மிகவும் பேதப்பட்டு விகாரம் அடைந்திருக்கின்றமை முன்னமே சொன்னேன். இம்மாறுபாடுகளைக் குறித்து இந்நூற் பதிப்பில் அடியேனுக்கோர் துணிவு புதிதாகப் பிறந்தது. இதுகாறும் அச்சிட்ட பழைய நூல்களில், ஒரு பிரதியின் ஆதாரமாவது இல்லாது பாட பேதத்தைத் திருத்துதல் ஒழித்த யான், இப்பொழுது பிரதிகளில் இருக்கும் அனைத்தும் பிழையென்றும், பிரதிகளில் இருக்கும் பாடம் ஆக்கியோன் வாய்மொழியாய் இருக்கமாட்டாதென்றும், எந்தப் பிரதி வழிச் சென்றாலும் அச்சில் வருவது ஆசிரியரினின்றும் வேறுபட்ட பிழைபாடென்றும் நிச்சயிக்க ஏது உண்டான இடங்களில் இரண்டொரு எழுத்தையாவது மொழியையாவது சந்தர்ப்பத்திற்கும் பொருளுக்கும் இயையுமாறு திருத்தத் துணிந்தேன். அவ்வாறு செய்யாவிடின் நூலின் சிறப்பு அழிவதுமன்றிச் சில பாடங்கள் ஒரு பயனுந் தராமலுஞ் சில முன்பின்னோடும் பிறநூல்களோடும் விரோதப்பட்டும் நிற்குமாதலிற்றிருத்தம் அத்தியாவசியமாயிற்று. இதனை உலகம் அறியச் சொல்லாமல் விடுவதே தப்பென்று உணர்ந்து இங்ஙனந் தெரிவிக்கலாயினேன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதனாலேயே தாமோதரம் பிள்ளையின் நிலைப்பாட்டிற்கும் சபாபதி நாவலர் நிலைப்பாட்டிற்கும் முரண்பாடு தோன்றுவதாயிற்று. இது தனிப்பட்ட இரு தமிழறிஞர்களுக்கிடையில் எழுந்த அபிப்பிராய பேதமாக மட்டுமன்றி, இரு வேறு காலத்து இயல்புகளைத் துல்லியமாய்க் காட்டுவதாயுமுள்ளது. எனக் கொள்ளுவதில் தவறில்லை. இதனை இன்னொரு விதத்தில் கூறுவதானால், மேலே குறிப்பிட்ட கருத்து வேறுபாடுகளுக்கு ஆதாரமாக வரலாற்று நோக்கு அமைந்துள்ளது எனலாம். நவீன இலக்கியத்தின் அடிப்படையில் ஒன்று வரலாற்று வாய்மை பற்றிய சிந்தனையாகும். பண்டைக்கால ஆசிரியர்கள் இலக்கியங்களும் தத்துவங்களும் காலங்கடந்தவை எனக் கருதினர். எக்காலத்துக்கும் ஏற்றவையாக அவர்கள் உயர் இலக்கியங்களைக் கொண்டனர். ஆனால் நவீன இலக்கிய ஆசிரியர்களின் பிரதான எடுகோள்களில் ஒன்று காலதத்துவம் பற்றியது. பௌதீக உலகின் மிக முக்கிய பரிணாமங்களில் ஒன்றாக மட்டுமன்றி, தனிமனிதனதும் சமூகத்தினதும் வரலாற்றையே நிர்ணயிக்கும் சக்தியாகக் காலம் அமைந்திருக்கின்றது என்பதே அத்தத்துவமாகும்.

தமிழில் மாத்திரமின்றி உலகின் வேறுமொழிகளிலும் நாகரிகங்களிலும் இத்தகைய ஒரு கருத்து மாற்றத்தையும் வளர்ச்சியையும் காணலாம். உதாரணமாக, பண்டைக் கிரேக்க, உரோம இலக்கியங்களிலே, தத்துவங்கள் காலங்கடந்தவை என்ற எ்ண்ணமே வேரூன்றியிருந்தது. ஐரோப்பாவிலே முதலாளித்துவ சகாப்பதத்தின் துவக்கத்தினைக் குறிக்கும் "மறுமலர்ச்சி" (Renaissance) எனப்படும் காலகட்டம் வரையில்," மரபுநிலை திரியா மாட்சியவாகிய" சிந்தனைகளே போற்றப்பட்டன. (ஐரோப்பிய மறுமலர்ச்சியானது ஏறத்தாழ கி.பி 15-ஆம், 16-ஆம் நூற்றாண்டுகளில் நிகழ்ந்தது. கொன்ஸ்தாந்தினோப்பிளின் வீழ்ச்சியுடன் ஆரம்பித்த அந்த அறிவியக்கம், அச்சியந்திரத்தின் வருகை அமெரிக்காவைக் கண்டறிந்தமை ஆகியவற்றால் துரித வளர்ச்சியடைந்தது. இத்தாலியில் தொடங்கிய இவ்விழிப்புணர்வு மேற்கு ஐரோப்பியா முழுவதிலும் படர்ந்து, கலை, இலக்கியம், விஞ்ஞானம், தத்துவம் முதலியவற்றில் பெரு மாற்றங்களை உண்டாக்கியது) மரபு செல்வாக்குடன் விளங்கிய சூழ் நிலையில் இலட்சியங்களை வழுவாது பின்பற்றுவதே சிறப்பாகக் கருதப்பட்டது. புதுமை போற்றப்படும் சூழ்நிலையில், தனிமனித முயற்சியும் பரிசீலனைகளும் புத்தாக்கமும் சிலாகித்துப் பேசப்பட்டன. முன்னதில் எக்காலத்துக்கும் பொருந்துவனவாய்க் கொள்ளப்பட்ட விழுமியங்கள் (Values) ஆட்சி செலுத்தின. பின்னதில் காலதேசவர்த்தமானங்களுக்குக் கட்டுப்பட்ட தற்புதுமைகள் பெரிதும் மதிக்கப்பட்டன. இவற்றையெல்லாம் கருத்திற்கொண்டே புகழ் பெற்ற ஆங்கில நாவலாசிரியரும் இலக்கியவாதியுமான ஈ. எம் பாஸ்டர் (E.M. Forster, 1879 – 1970) பின்வருமாறு கூறினார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பண்டைக்கால இலக்கியங்கள் விழுமியங்களின் அடிப்படையில் அவற்றை உரைகல்லாகக் கொண்டு வாழ்க்கையைச் சித்தரித்தன. நவீன படைப்புக்கள் கால ஒழுங்கையும் ஓட்டத்தையும் ஆதாரமாய்க் கொ்ணடு வாழ்க்கையை விளக்க முற்படுகின்றன. நாவலிலக்கியம் கால ஒழுங்கை மையமாகக் கொண்டு எழுந்த ஓர் இலக்கிய வடிவமாகும்.

புராதன இந்திய இலக்கியங்களையும் வேதங்களையும் மனதாரப் போற்றிய மகாகவி பாரதியார் கூட இவ் விசயத்தில் நவீனத்துவத்தை நன்குணர்ந்தவராகப் பாடுகின்றார்.

பின்னும் (ஸ)மிருதிகள் செய்தார் - அவை
பேணும் மனிதர் உலகினில் இல்லை
மன்னும் இயல்பின வல்ல - இவை
மாறிப் பயிலும் இயல்பின ஆகும்
காலத்திற்கேற்ற வகைகள் - அவ்வக்
காலத்திற் கேற்ற ஒழுக்கமும் நூலும்
ஞால முழுமைக்கும் ஒன்றாய் - எந்த
நாளும் நிலைத்திடும் நூலொன்றும் இல்லை

காலத்தத்துவத்தைக் கவிஞர் இதற்குமேல் தெளிவாயக் கூறியிருக்கவியலாது. இந்த நுண்ணிய உணர்வுதான் பாரதியை மகாகவி ஆக வைத்தது. மேலே நாம் குறிப்பிட்டது. போல சி.வை. தாமோதரம்பிள்ளையிடத்து இந்த வரலாற்று மெய்மை (Historicity) நாட்டத்தை காணக்கூடியதாயிருக்கிறது. சபாபதி நாவலரோ விழுமியங்களையே "வேதவழக்கு" எனக் கூறி வரலாற்று நோக்கை நிராகரித்தார்.

நவீனகாலம் என்று நாம் குறிப்பிடும்போது, நமக்கு அண்மித்த நாம் வாழுகின்ற காலம் என்ற பொருள் மட்டுமன்றி அதற்கு முந்திய காலப்பகுதிகளிலிருந்து வேறுபட்ட தன்மைகளைக் கொண்ட காலப்பகுதி அண்மைக்காலம், சமகாலம், தற்காலம் என்ற பொருள்கள் மாத்திரமல்லாது. பண்பு வேறுபாடுகளும் நவீன காலம் என்ற சொற்றொடரில் அமைந்திருப்பதை, இதற்குப் பரியாயப் பெயராக வழங்கும் தொடர்கள் சில குறிக்கின்றன. உதாரணமாக இருபதாம் நூற்றாண்டுத் தமிழ் இலக்கியம், தற்காலத்தமிழ் இலக்கியம் என்பவற்றைக் காட்டலாம். இவற்றிலே நவீனம் ,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புதுமை, மறுமலர்ச்சி முதலிய சொற்கள் பண்பு அடிப்படையில் அமைந்தவை என்பது தெளிவாகும். இவற்றிடையே சிற்சில நுண்ணிய கருத்துச்சாயை வேறுபாடுகள் இருப்பினும் " புதுமை" என்ற அம்சம் பொதுவானதாய் இருப்பதும் கவனிக்ககத்தக்கது. அதாவது முற்பட்ட காலங்களில் பெருமளவுக்கு வேறுபட்டுக் காணப்படுவது இக் காலப்பகுதியின் மிக முக்கிய பண்பு எனலாம். ஆனால், இலக்கிய வரலாற்றை நோக்கும் பொழுது, ஒவ்வொரு காலப்பகுதியும் அதற்கு முந்திய காலப்பகுதியிலிருந்தோ, சமகாலப்பகுதிகளிலிருந்தோ வேறுபடுவது சகஜம் எனக் கண்டோம். அவ்வாறிருக்கும் போது, நவீன இலக்கியத்திற்கு மாத்திரம் புதுமையை விசேசமாகக் கொள்ள வேண்டியதன் காரணம் என்ன என்ற வினா இயல்பாக எழலாம். அதற்கு விடையும் கூறியே ஆகவேண்டும்.

நவீன இலக்கியத்தின் மிக முனைப்பான அம்சங்களில் ஒன்று. புதுமையை – மாற்றத்தை – பிரக்ஞை பூர்வமாக மேற்கொள்ளுவதாகும். சுபாபதி நாவலரது கூற்றிலே "முறை பிறழாமை" என்ற கருத்துவற்புறுத்தப்பட்டதைக் கண்டோமல்லவா? ஆதற்கு நேரெதிரானது தற்புதுமை நாட்டம் எனலாம். "முன்னோர் மொழியைப் பொன்னே போல்" போற்றுவதே முறை பிறழாமையின் முக்கியமான வெளிப்பாடாகும். இதற்கு மாறாக நவீன காலத்து எழுந்த ஆற்றல் மிக்க இலக்கியங்கள் எல்லாம் "புதுமை புதுமை" என்றே வெளிப்படையாகக் கூறிக்கொண்டன. இக்குரல்கள் யாவற்றுக்கும் வடிவம் கொடுப்பது போல அமைந்ததே பாரதியாரின் பாடல் ஒன்று. எட்டயபுரம் ஜமீன்தாருக்கு 1019ம் ஆண்டில் அவர் எழுதிய சீட்டுக்கவியில் மேல்வரும் அடிகள் இடம் பெற்றுள்ளன.

சுவைபுதிது பொருள்புதிது வளம்புதிது

செற்புதிது சோதிமிக்க

நவ கவிதை எந் நாளும் அழியாத

மகா கவிதை

என்று,தனது கவிதையைப் பற்றி ராஜேந்திர பூபதிக்கு அவர் இவ்வாறு வருணித்திருப்பது நவீன இலக்கியத்தின் தலையாய பண்பு ஒன்றினையும் சுட்டிக் காட்டுவதாயிருக்கிறது. பாரதி யாருக்குச் சிறப்பாயமைந்த தன்னுணர்ச்சிப்பாடல் தமிழுக்குப் புதியதே என்பதில் ஐயமில்லை. ஆங்கிலத்தில் அதனை Lyric என்பர். அச் சிறு கவிதை வடிவம் மட்டுமேயன்றி, நாடகம், நாவல், சிறுகதை முதலியனவும் அப்புதுமை நாட்டத்தின் காரணமாகவும் காரியமாகவும் அமைந்தன. என்பது நினைவு கூறவேண்டியதொன்று, இதனையெல்லாம் மனங்கொண்டே பாரதியாரின் கவிதா மண்டலத்தைச் சேர்ந்த பாரதிதாசனாரும் "புதுநெறி காட்டிய புலவன்"

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்று தமது குருவைக் குறிப்பிட்டார். பாரதியாரைப் பற்றி நூல் எழுதியவருள் ஒருவரான தி.ஜ. ரங்கநாதன் புதுமைக் கவிஞர் (1940) என்ற மகுடமிட்டமையும் நினைந்து கொள்ளத்தக்கதே. "புதுமை" என்ற பதத்தைப் பாரதியாரும் பலவிடங்களில், உணர்ச்சி ப் பெருக்குடனும் குதூகலத்துடனும் பயன்படுத்தினார். உதாரணமாக, வேதநாயகம் பிள்ளை, ராஜமையர், மாதவையா ஆகிய நாவலாசிரியர்கள் தாம் புதியதோர் இலக்கிய வகையினையும் வடிவத்தையும் தமிழிற் புகுத்துவதாகக் கூறியிருப்பதைக் காண்கிறோம். அதைப் போலவே,"நாடக முன்னோடி" எனப் போற்றப்படும் **மனோன்மணியம்** ஆசிரியர், பேராசிரியர் சுந்தரம்பிள்ளை தனது நூலுக்கு எழுதிய முகவுரையில் பின்வருமாறு கூறினார்.

> அருமையாகிய பூருவ நூல்களைப் பாதுகாத்துப் பயின்று வருதலாகிய முதற் கடமையோடு, அந்தக் காலநிலைக்கேற்றவாறு புது நூல்களை இயற்ற முயலுதல் ஒவ்வொரு தலைமுறையாருக்கும் கடமையாய் ஏற்படுகின்றது. கனிஷ்டனாகிய சிறியோன் - நவீனமான பல வழிகளுள்ளும் என் சிறுமதிக்கு ஏற்றதோர் சிறு வழியிற் சிலகாலம் முயன்று இயற்றியது **மனோன்மணியம்** என்னும் இந்நாடகம்.

"புது நூல்கள்" நவீனமான பல வழிகள்" என்று சுந்தரம்பிள்ளை கூறுவது கவனித்தற்குரியது. புதுமை குறித்து இவ்வாறு எழுதிய ஆசிரியர் அன்றைய சூழ்நிலையில் பெரும்பாலும் மரபு வழிப்பட்டே இயங்கினார். ஆயினும், பி.ஸ்ரீ. ஆசார்யா கூறியிருப்பது போல, புதுமையையும் பழமையையும் இணைத்து அமைதி காண முயன்றவர்களில் நவீன வழிகளிற் சென்றவர். ஆக்க இலக்கிய முயற்சிகளில் பழமை பேணுபவராகவே இருந்தார். காலணி ஆதிக்க நாடுகளில் வாழ்ந்த பல புத்திசீவிகளிடத்து இம் முரண்பாட்டைக் காணலாம். இதனை விரிவாக ஆராய்வதும் சுவையான செய்திகளைக் காட்டுவதாயிருக்கும்.

ஆக, நாடகம், நாவல், தன்னுணர்ச்சிப்பாடல் முதலிய நவீன இலக்கியங்களைத் தமிழில் தொடக்கி வைத்த முதன் முயற்சியாளர்கள் அனைவரம், தாம் புகுவது புனைவதில் ஈடுபட்டிருந்தமையை நன்கு மிக முக்கியமானது என்பதை இதற்கு மேலும் வற்புறுத்த வேண்டாம்.

இவ்வாறு கூறியதும் , இப்பண்பு எப்பொழுது தொடங்குகிறது என வினவுவது இயல்பே. சுருங்கக் கூறின் நவீன தமிழிலக்கியத்தின் பண்புகளை ஆராயப் புகும் நாம். எடுத்துக் கொண்டுள்ள காலப் பிரிவுக்கு எல்லை வகுத்தல் இன்றியமையாதது ஆகும். ஆயினும் திட்டவட்டமான வருடத்தையோ காலத்தையோ இங்கு குறிப்பிடுதல் சாத்தியமன்று. பொதுவாகக் கூறுவதானால் சென்ற நூற்றாண்டின் நடுப்பகுதியிலிருந்து. நவீன தமிழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலக்கியத்தின் அடிப்படைகள் மெல்ல மெல்ல உருவாகி உரம் பெற்று வந்தன. எனக் கூறிக் கொள்ளலாம்.

பத்தொன்பதாம் நூற்றாண்டின் தொடக்கத்தில் ஆங்கிலேயர் தமது ஆட்சியை இந்தியாவிலும் இலங்கையிலும் உறுதியாக நிலவும் முயற்சியில் வெற்றி கண்டனர். அந்த வகையில் அதனை ஒரு கால எல்லையாகக் கொள்ளலாமாயினும் அந் நூற்றாண்டின் நடுப்பகுதிக்குப் பின்னரே அவ்வாட்சியின் விளைவுகள் வியாபகமாயின. இந்தியாவைப் பொறுத்தமட்டில் சிப்பாய்க் கலகம், அல்லது முதற் சுதந்திரப் போர் என வழங்கப்படும் அரசியல் நெருக்கடிக்குப் பின் ஆங்கிலேயராட்சி இறுதிவடிவம் பெற்றதெனலாம். இக்காலப் பகுதியையடுத்தே – 1857ல் மெக்காலே பிரவு என்பார். இந்தியருக்கு ஆங்கிலேயக் கல்வியின் இன்றியமையாமை குறித்து பிரசித்தி பெற்ற ஆலோசனையை வெளியிட்டார். தென்னிந்தியாவையும் ஈழத்தையும் நோக்கும் பொழுது 1850- க்குப் பிற்பட்ட காலத்தை நவீன இலக்கிய காலத்தின் தொடக்கநிலை எனக் கூறுவதில் தவறு இருக்காது என்றே கருதுகின்றேன்.

அங்கொன்றும் இங்கொன்றுமான உதாரணங்களை – மாதிரிகளை – எடுத்துப் பார்த்தாலும் இக் கருதுகோள் நிரூபணமாகும். சென்ற நூற்றாண்டின் நடுப் பகுதிக்குப் பின்னரே பழந் தமிழ் நூல்களின் வெளியீட்டுப் பணி, சுதந்திரமாகவும் இடையூறு இன்றியும் நடைபெறத் தொடங்கியது. குறிப்பாகச் சங்க இலக்கியங்கள், தொல்காப்பியம் முதலிய ஆதிகாலப் பனுவல்கள் கடந்த நூற்றாண்டின் கடைக்காலிலேயே பெருமளவு வெளிவந்தன. 1875ம் ஆண்டிலிருந்து 1925ம் ஆண்டுக்கிடையில் பதிப்புப் பணி உச்ச நிலையை அடைந்தது. எனலாம் . பாரம்பரியத்தைத் தற்காலத்துக்குரியதாக்கிய பணி இது.

இன்னொரு துறையை எடுத்துக் கொண்டால் 186ல் கால்டுவெல் பாதிரியாரின் திராவிட மொழிகளின் ஒப்பிலக்கணம் வெளிவந்தது மொழியியலைத் தமிழியல் ஆய்வின் ஓர் அம்சமாக இப் பிரசித்தி பெற்ற இந் நூல் ஆக்கி வைத்தது.

அதைப் போலவே மொழியியல், சமூகவியல், வரலாறு முதலிய துறைகளில் ஈடுபாடு கொண்டிருந்த இலங்கையரான சைமன் காசித் செட்டி (1807 -1860) வெளியிட்ட தமிழ்ப புலவர் சரிதமான வுயஅடை ீடரவயசஉா (1859) இலக்கிய வரலாற்றுத் துறைக்கு வித்திட்டது. அதனை சி. வை. தாமோதரம்பிள்ளை, வி. கனகசபைபிள்ளை, வி. கோ. சூரியநாராயண சாஸ்திரியார், எம். எஸ் பூரணலிங்கம் பிள்ளை முதலியோர் மேலும் மெருகூட்டி வளர்த்தனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இத்தகைய ஆய்வாளர்களும் புதுமையான நாவல் இலக்கிய வடிவத்தைக் கையாண்டு எழுதிய படைப்பாளிகளும் நவீனஇலக்கியங்களின் தோற்றத்திற்கும் வளர்ச்சிக்கும் இன்றியமையாததாக உரைநடையை உருவாக்கினர். நவீனத்துவம் குறிக்கும் பண்புகளான வரலாற்று நோக்கு,ஆய்வறிவு, சமூகச் சார்பு, தற்புதுமை, தனித்துவம், எளிமை, பொதுமக்கள் நலமாட்டம் முதலியனவெல்லாம் உரைநடையில் வாயிலாகவே இலகுவாகவும் விரைவாகவும் தெளிவாகவும் இலக்கியங்களால் உணர்த்தப் பெற்றன. ஆகவே உரைநடையும் நவீனத்துவமும் உடன்பிறப்புக்கள் என்று கூறுவதில் தடையில்லை. பத்தொன்பதாம் நூற்றாண்டின் பிற்பகுதியிற்கூட உரைநடை அருந்தலாகவே பயின்று வந்தது. பிரதான தொடர்பு சாதனமாக அக்கால கட்டத்திலும் அமைந்திருக்கவில்லை. இம்மமென்றால் நூறும் ஏனென்றால் இருநூறும் செய்யுள்களாக பாடிக்குவிக்க வல்லவர்கள் செறிவான சில வசனங்களை எழுதும் பயிற்சியும் பக்குவமும் இல்லாதிருந்தனர். பாலர் வகுப்பிலிருந்து பல்கலைக்கழக வகுப்புவரையில் வசன நடையிலமைந்த பலதுறை சார்ந்த நூல்களை வழங்கும் இக்காலத்திலே, உரைநடை பெருவழக்கு அற்றிருந்த நிலைமையைக் கற்பனை செய்வதுதானும் கடினமாயிருக்கும். ஆனால் 19ம் நூற்றாண்டிலே நவீன இலக்கியங்களை படைக்க முற்பட்டவர்களின் பின்னணியைச் சரிவரப் புரிந்து கொள்வதற்கு இச் செய்தி முக்கியமானதாகும். 1862ம் வருடத்தில் எம். உவின்சுலே எனும் கிறிஸ்தவப் பாதிரியார் **தமிழ்- ஆங்கில அகராதி** ஒன்றை வெளியிட்டனர். இராமானுசக் கவிராயர், வீரசாமிச் செட்டியார், விசாகபெருமாளையர் முதலிய தமிழ் நாட்டுப் புலமையாளரும் விசுவநாதபிள்ளை, நெவின்ஸ் முதலிய இலங்கைத் தமிழ் அறிஞரும் இவ்வகராதித் தொகுப்பிற்குப் பெரிதும் துணைபுரிந்தனர். நூலின் முன்னுரையில் பதிப்பாசிரியர் மேல்வருமாறு குறிப்பிட்டார்.

> தமிழ் உரைநடை இப்பொழுதுதான் வடிவம் பெற்றுக் கொண்டிருக்கிறது. ஆகையால், அதனைச் செம்மையாக உருவாக்குவதற்குத் திட்பநுட்பம் வாய்ந்த அறிஞர்கள் உழைப்பாளர்களானால் அம்முயற்சிக்கு தகுந்த பலனைத் தரும் சுதேசிகள் பலர் விரைவாகச் செய்யுள் இயற்ற வல்லாராயினும் பிழையின்றி உரைநடை ஒரு பக்கந்தானும் எழுதமாட்டாராயிருக்கக் காணலாம்.

உவின்சுலோ சுட்டிக்காட்டிய குறைபாடு திடீரென நீங்கிவிடவில்லை. பத்திரிகைகள், பாடநூல்கள், துண்டுப் பிரசுரங்கள் முதலியவற்றையும் நாவல்கள், கட்டுரைகள், கடிதங்கள் முதலியவற்றையும் தமிழறிஞர்கள் அதிகமாக எழுதியதன் பயனாகவே வசனநடை வளர்ச்சி பெற்றது. வலிமை பெற்றது. பி. ஆர். ராஜமையரிலிருந்து இன்றைய கி. ராஜநாராயணன் வரையில் தமிழ் நாவல் இலக்கியம் வளர்ந்து வந்திருக்கின்றதென்றால்,தமிழ் உரைநடையும் பல்வேறு தேவைகளுக்கு ஈடுகொடுத்து நெகிழ்ச்சியும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மலர்ச்சியும் பெற்று வந்திருக்கிறது. என்பதே அர்த்தமாகும். சுப்பிரமணிய பாரதி, வ.வே. சு. ஐயர், வ.ரா. கல்வி, புதுமைப்பித்தன், கு.ப.ரா, அண்ணாதுரை, இலங்கையர்கோன், ராமாமிர்தம், கு.அழகிரிசாமி, தி.ஜானகிராமன், சிதம்பர ரகுநாதன், செ.கணேசலிங்கன், ஜெயகாந்தன், கி.ராஜநாராயணன், செ.யோகநாதன், கே. டானியல் முதலியோர் பலரது பாராட்டைப் பெற்ற எழுத்தாளராய் இருந்து வந்துள்ளனர். என்றால்.அவர்களது தனித்துவமான நடைச் சிறப்புக்களும் அவர்களின் வெற்றிக்குக் காரணமாயமைந்தன என்பதை நாம் மறந்துவிட முடியாது.

உரை நடை வளர்ச்சிக்கு முற்படு தேவையாயும், இன்னொரு வகையில் பார்த்தால் உரைநடை வளச்சியின் உடன்நிகழ்ச்சியாகவும் உள்ளது. வாசகர் கூட்டத்தின் (Audience) பெருக்கம். ஏனெனில் நவீன இலக்கியங்களை முற்பட்ட காலத்து இலக்கியங்களிலிருந்து வேறுபடுத்துவது இரண்டனுக்குமுள்ள வாசகர் கூட்டத்தில் மாறுபட்ட தன்மையாகும். 'பொதுமக்கள்' என்ற சொல்லால் குறிக்கப்படும் தெளிவான உருவமற்ற ஒரு வாசகர் கூட்டத்தைப் பெரும்பாலும் மனதிற்கொண்டே நவீன எழுத்தாளன் தனது ஆக்கங்களை உருவாக்குகின்றான். உரைநடை இலக்கிய கர்த்தாக்களுக்கே இது கூடுதலாகப் பொருந்துவதாயினும், கவிஞர்களும் வாசகர் கூட்டம் பற்றிய உணர்வுடனேயே செயல்பட வேண்டியிருக்கிறது. பலமுறை பலராலும் எடுத்துக் காட்டப்பட்டுள்ள மேற்கோள் ஒன்று இவ்விடத்தில் தேவை கருதி நினைவுகூரத் தக்கது.

> எளிய பதங்கள், எளிய நடை எளிதில் அறிந்து கொள்ளக்கூடிய சந்தம், பொது ஜனங்கள் விரும்பும் மெட்டு இவற்றினையுடைய காவியமென்று தற்காலத்திலே செய்து தருவோன். நமது தாய்மொழிக்கு புதிய உயிர் தருவோனாகின்றான். ஓரிரண்டு வருசத்து நூற்பழக்கமுள்ள தமிழ் மக்களெல்லோருக்கும் நன்கு பொருள் விளங்கும்படி எழுதுவதுடன், காவியத்துக்குள்ள நயங்கள் குறைவுபடாமலும் நடத்துதல் வேண்டும்.

1912ம் வருடம் வெளிவந்த **பாஞ்சலி சபதம்** முகவுரையில் பாரதியார் மேலுள்ளவாறு எழுதியபோது,'பொது ஜனங்கள்' என்ற சொல்லால். ஓரிரண்டு வருசத்து நூற்பழக்கமுள்ள'வாசகரையும் மனங்கொண்டிருந்தமை வெளிப்படை அதே சமயத்தில் 'காவியத்துக்குள்ள நயங்கள் குறைவு படாமலும்' எழுதுதல் அவசியம் என்று கவிஞர் கருதினார். நவீன இலக்கியத்தின் அடிப்படைப் பிரச்சனைகளில் ஒன்று, பொதுமக்கள் சார்ந்தனவாயும் தரமானவையாயும் உள்ளவற்றைப் படைக்க வேண்டியிருப்பதாகும். முற்காலக் கவிஞருக்கு இப்பிரச்சனை இவ்வடிவத்தில் இருக்கவில்லை. கற்றோரை நோக்கியே அவர்கள் செய்யுள் இயற்றினர். இக்காலத்திலும் கல்வியில் வல்லோர்க்கு நூல் எழுதும் முறை இருப்பினும், பொதுவில் படைப்பிலக்கிய கர்த்தாக்கள், பரந்துபட்ட வாசகர் கூட்டத்தை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மனங்கொண்டே எழுதவேண்டியுள்ளது. இது நவீன இலக்கியத்தின் அடிப்படைகளில் ஒன்றாக மட்டுமன்றி, எத்தனையோ பிரச்சனைகளுக்கு ஊற்றாகவும் அமைந்துள்ளது.

கவிதையிலே பாரதியார் சாதித்த பலவற்றை உரைநடையிலே கண்டவர் அ.மாதவையா(1872 – 1925) பொது மக்களுக்கென்றே கவிதைகள் எழுதுதல் வேண்டுமென்ற உணர்வுடன் எழுதியவர்களில் அவரும் ஒருவர். 1914-ல் அவர் வெளியிட்ட **பொது தர்ம சங்கீத மஞ்சரி** என்ற பாடல் நூலின் முன்னுரையில் பின்வருமாறு கூறினார்.

> சிங்கார ரசமும், பக்தி ரசமும் செறிந்துள்ள பாட்டுக்கள் தமிழராகிய நமக்குள் அமோகமாயுள : நாடு, நகர: மடாலய ஜன சமூகப் பொது தர்மங்களைக் கூறும் கீதங்களோ நரிக்கொம்பே பொது நன்மைக்காக உழைத்தவரும் எனது நண்பர் ப்ரும்மஸ்ரீ எஸ். வி. விசுவநாதையர்.இக்குறையை நீக்கக் கருதி இந்தியாவின் அருமை பெருமைகளையும், சாமான்ய கல்வியும் கைத்தொழில்களாகிய தற்கால நாகரிகங்களும் பற்றி எளிய நடையில் யாவரும் பயன்படும் வண்ணம் இயற்றப்படும் தமிழ்ப் பாட்டுக்களுக்கு இரானடே,கோக்கலே என்னும் தேசாபிமானிகள் பேரில் ரூ.300 வரைப் பரிசுகள் கொடுப்பதாய்ப் பத்திரிகைகளில் விளம்பரஞ் செய்தார். அவ் விளம்பரப்படி சாதாரண ஜனங்களுக்கென்றே பெரும்பாலும் உண்டாக்கப்பட்ட இச் சங்கீத மஞ்சரி நம் தமிழ்நாட்டில் ஊர் தோறும், வீடு தோறும் நறுமணம் வீசி ஆண்பெண் இரு பாலாரும் மகிழ்ந்து கொண்டாடப்பட வேண்டுமென்பது எம் உள்ளத்தழைப்பு.

காலத்தின் தேவையாயிருந்த கருத்துகுக்களை ஏறத்தாழ சமகாலத்தில் பாரதியாரும் மாதவையாவும் பிரகடனப்படுத்தியிருப்பது கவனத்திற்குரியது. "பொது ஜனங்கள்","சாதாரண ஜனங்கள்" ஆகிய சொற்பிரயோகமும் "தற்கால" உணர்வும் இவர்களின் கூற்றுக்களில் வெளிப்படையாய்த் தெரிவதும் மனங்கொள்ள வேண்டியதே.

நவீனகாலம் அல்லது தற்காலம் என்பன சில தனிப்பண்புகளை உடைய காலப்பகுதியொனறனைக் குறித்து நிற்கும் சொற்றொடர்களாகும். வரலாற்று அடிப்படையில் அமைந்த பாகுபாடு இது நாம் விரும்பினாலென்ன விரும்பாவிட்டாலென்ன நமது சமுதாயத்திலே – ஏன் உலகத்தில் என்றே கூறிவிடலாம். நம்மைச் சுற்றி ஓயாமல் மாற்றங்கள் நிகழ்ந்து கொண்டிருக்கின்றன. அவற்றைப் புறநிலை நிகழ்ச்சிகள் என்று கணிக்கின்றோம். மதிப்பிடுகின்றோம். நவீன காலம் என்று கூறும் பொழுது நாம் எத்தகைய புறநிலை நிகழ்ச்சிகளையும் அவற்றுக்கிணையான

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அகநிலை உணர்வுகளையும் கருதுகின்றோம். என்று உன்னிப் பார்த்தால் பயனுடையதாகும்.

புறநிலை நிகழ்வுகளுக்கும் அகநிலை உணர்வுகளுக்கும் உள்ள பிணைப்பைச் சரிவர உணராமையாலேயே நமது மதிப்பீடுகள் பல சமயங்களிலே தவறுடையவனவாய் அமைந்து விடுகின்றன. உதாரணமாக சமுதாயத்தில் வாழும் ஒருவருக்கு பிடித்தாலும் பிடிக்காவிட்டாலும் விஞ்ஞானத்தின் விளைபொருட்கள். வாழ்வில் இடம்பெறுகின்றன. அது புறநிலை நிகழ்ச்சி ஒருவருக்கு அத்தகைய பொருட்களில் யாது காரணத்தாலோ வெறுப்போ, விருப்பமின்மையோ இருத்தல் கூடும். அது அவரது அகநிலையுணர்வு அவருக்கு விருப்பமில்லை என்பதற்காகப் புறநிலை நிகழ்வு நிகழாமலிருக்கப்போவது இல்லை. இரண்டுக்கும் இடைவெளி அதிகரித்தால் பல சிக்கல்கள் தோன்றுகின்றன. இடைவெளி குறைந்தால் ஒன்றுக்கொன்று அனுசரணையாக இரண்டும் இயங்குதல் இயலும்.

வாழ்க்கைக்கு அடிப்படையாயுள்ள இப்பொழுது நியதி இலக்கிய வரலாற்றுக்கும் ஏற்புடையதாகும். நவீன காலத்தை, வெவ்வேறு கோணங்களிலிருந்து நோக்குபவர்கள், வெவ்வேறு பெயரிட்டழைப்பர். மக்கள் யுகம், ஜனநாயக யுகம், விஞ்ஞான யுகம், குடியரசு யுகம் என்று கவிஞனாம் பாரதியை மக்கள் கவி, ஜனநாயக கவி, புதுயுகக் கவி, குடியரசுக் கவி, புரட்சிக் கவி என்றெல்லாம் பலரும் பலவாறு வழங்குவர். இவ்வழக்காறுகள் நமக்கு உணர்த்துவது என்ன?

மேற்கூறிய அம்சங்கள், தற்காலத்தில் எமது வாழ்விலே கலந்தும், வாழ்க்கையோடு நெருங்கிய தொடர்புடையனவாயும் இருக்கின்றன. என்பதையே இச்சொற்றொடர்கள் குறிக்கின்றன. இன்னுங் கூறுவதானால், முற்கூறிய தொடர்களில் மக்கள், சமுதாயம், சமூகநலன், புரட்சி முதலிய கருத்துப்படிவங்கள் நேரடியாகவும் மறைமுகமாகவும் புலப்படுவதை காணலாம். இவை நவீன காலத்திற்குரிய சிறப்பியல்புகளாய் இருப்பதனாலேயே இலக்கியத்திலும் தவிர்க்க இயலாதவாறு பிரதிபலிக்கின்றன. உதாரணமாக, இருபதாம் நூற்றாண்டுத் தமிழ் அக்டோபர் புரட்சிக்குப் பின்னர் மெல்ல மெல்ல, பொதுவுடைமைச் சிந்தனைகளும் இயக்கங்களும் பரவியதைத் தொடர்ந்து, இலக்கியத்தில் அவற்றின் தாக்கமும் விளைவும் அதிகரித்து வந்துள்ளன. இதனால் அக் கொள்கைப் பரம்பலும் குறிப்பிடத்தக்கனவாய் இருக்கின்றன. நவீன இலக்கியங்கள் இந் நிலையைப் பிரதிபலித்தல் இயல்பே.

பன்னெடுங்காலமாகச் சமயங்களின் வழிவந்த இலக்கிய நெறி இருபதாம் நூற்றாண்டிலே சமுதாய வழி நிற்பது நாம் முதலில் எடுத்துக் கூற

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேண்டிய செய்தியாகும். இம் மாற்றம் ஏற்பட்டதற்குரிய காரணங்களைச் சுருக்கமாகவேனும் ஆராய்தல் தகும்.

அந்நியரான ஆங்கிலேயரின் ஆட்சி நிலைநாட்டப்பட்டதைத் தொடர்ந்து நமது சமுதாயத்தில் சகல துறைகளிலும் பாரதூரமான மாற்றங்கள் ஏற்படலாயின. ஆங்கிலேயர் இந்தியாவில் நிலவும் சமயங்களுக்குத் தடையாக வெளிப்படையான நடவடிக்கைகளை எடுத்தாரல்லர். ஆயினும், அவர்களது ஆட்சி முறை ஏனைய துறைகளைப் போலவே சமயத்துறையிலும் சீர்குலைவு , நிலைதடுமாற்றம் ஆகியன உண்டாக வழிவகுத்தது. அது காலவரை சமயங்களின் வழி வாழ்க்கையும் கலை இலக்கியங்களும் இயங்கி வந்தனவாகையால், பாரதூரமான மாற்றங்கள் ஏற்படத் தொடங்கியதும் சமயத்துறையிலேயே நெருக்கடிகளும் முரண்பாடுகளும் முனைப்பாகத் தோன்றின: வெடித்தன. பத்தொன்பதாம் நூற்றாண்டு கீழைத்தேயச் சமூக இயக்கங்கள் யாவுமே சமயத்துறை பற்றி எழுந்தன. ஆனால் "ஆன்மீக பக்தி ரூபத்தில் அவை வெளிப்பட்ட போதிலும் அவற்றுக்கு மூலமாய், அடிப்படையாய், தூண்டுகோலாய்" மக்களின் வாழ்க்கை பற்றிய அனுதாபக் குரல்களும் எதிர்ப்புக் குரல்களுமே அமைந்திருந்தன. என்பதை நாம் மறந்துவிட இயலாது.

நவீன காலம் என்பது ஆங்கிலேயர் ஆட்சிக்காலத்தையும் பகுதியொத்திருக்கின்றது. இது முக்கியமான செய்தியாகும். முந்திய நூற்றாண்டுகளில் அரசவம்சங்கள் மாறும்பொழுது, இராசதானியிலும் அரசவையிலும் சில பல மாற்றங்கள் நிகழுமாயினும், கீழ்மட்டத்தில், வெகுஜனங்களின் வாழ்க்கையில் குறிப்பிடத்தக்க மாற்றங்கள் எதுவும் நிகழவில்லை. இராமன் ஆண்டாலென்ன? இராவணன் ஆண்டாலென்ன? என்னும் மக்கள் கூற்று இவ்வுணர்வைப் பிரதிபலிப்பதே. உதாரணமாக, பல்லவர் ஆட்சியானாலும் சரி பாண்டியர் ஆட்சியானாலும் சரி தமிழ்நாட்டு மக்களின் வாழ்க்கை முறையில், அதாவது பொருளாதாரம் ,சமூகஅமைப்பு, நீதி பரிபாலனம், சமய நிறுவனங்கள், நடை உடை பாவனை இவற்றில் விதந்து கூறத்தக்க மாற்றங்கள் நிகழ்ந்தன. என்பதற்கில்லை. கடலின் மேற்பரப்பில் புயலும் அலையும் பெரும் சலனத்தை ஏற்படுத்தினாலும் கடலின் ஆழ் மட்டத்தில் அமைதியும் சலனமின்மையும் காணப்படுவது போல, அரசவம்சங்கள் ஒன்றையொன்று எதிர்த்து அடித்து வீழ்த்தி சலனங்களை உண்டாக்கியபோதும் , பல நூற்றுக்கணக்கான கிராமங்களாகவும் சிற்றூர்களாகவும் சிதறுண்டு கிடந்த தமிழக மக்களுடைய வாழ்க்கையில் பெருமாற்றங்கள் எதுவும் நிகழவில்லை. இவ்விடத்திலே இந்தியாவைப் பற்றி பொதுவாக கார்ல்மாக்ஸ் கூறியுள்ள குறிப்பு ஒன்று நினைவு கூறத்தக்கது.

இந்துஸ்தானத்தில் உள்நாட்டுப் போர்களும் படையெடுப்புக்களும் புரட்சிகளும் வென்றடக்கும் ஆக்கிரமிப்புக்களும் பஞ்சங்களும் அடுத்தடுத்து நிகழ்ந்தன. என்பதுவும். அவை சிக்கலானவை என்பதோடு விரைவாக

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிகழ்ந்து பெரிய அழிவுகளை ஏற்படுத்தின. என்பதுவும் உண்மையே. ஆனால் அவையெல்லாம் சமூதாயத்தின் மேற்பரப்பையே பாதித்தன. இந்தியாவில் கடந்த காலத்தில் அரசியல் எவ்வாறு மாறிய போதிலும் சமுதாய நிலை மாறவில்லை. பண்டு ஒழிந்த காலத்திலிருந்து பத்தொன்பதாம் நூற்றாண்டின் தொடக்கம் வரை மாறவேயில்லை. அரசுகள் சிதைந்து சின்னாபின்னமானதைப் பற்றி இந்தியக் கிராமவாசிகள் கவலைப்பட்டதேயில்லை. கிராமம் முழுசாக இருக்கும் போது அது எந்த அரசுக்கு மாறுகிறது அல்லது எந்த மன்னனது பொறுப்பாயிருக்கின்றது. என்பதைப்பற்றி அவர்கள் கவலைப்படுவதில்லை. ஒரே அச்சில் வார்த்தன போன்றும் மாறாதனவாயும் இருந்த இச் சிறு சமூகங்கள் பெரும் அளவுக்கு அழிந்து விட்டன. அவை மறைந்து கொண்டிருக்கின்றன. ஆங்கிலேயரது நீராவிச் சக்தியும் வர்த்தக சுதந்திரமும் ஆற்றிய வினையே இவ்வழிவுக்குக் காரணமாகும். அந்தக் குடும்ப சமூகங்கள் வீட்டுத் தொழில் முறையை அடிப்படையாகக் கொண்டிருந்தன: அதாவது கையால் நூற்றல், கைநெசவு, கரத்தால் ஏர் பிடித்து உழுது பயிரிடல் ஆகியவற்றின் அலாதியான இணைப்பே சுயபலத்தில் நிமிர்ந்து நிற்கும் திறனை அவற்றுக்கு அளித்தது. ஆங்கிலேயர் தலையீட்டால் - ஓரளவுக்கே நாகரிகம் எய்திய அச்சிறு சமூகங்களின் பொருளாதார அடிப்படை தகர்ந்தது. அச் சமூகங்கள் அழிந்தன. இது ஆசியாவில் நிகழ்ந்த மிகப்பெரிய சமூகப் புரட்சியாகும். உண்மையை உரைப்பதெனில், ஆசியாவில் நிகழ்ந்த ஒரே புரட்சி இது.

(இந்தியாவில் முதல் விடுதலைப் போர் 1857-1859)

ஆங்கிலேயர் ஆட்சியானது ஆரம்பத்தில் சமயம், சமூக அமைப்பு முதலிய விசயங்களில் நேரடியாக அதிகம் தலையிடாவிடினும் காலப் போக்கில் அதன் அந்நியத்தன்மை காரணமாகவும், பொருளாதார அடித்தளத்தில் மாற்றமேற்பட்டதாலும் ஒன்றுடன் ஒன்று பின்னிப் பிணைந்த ஓர் ஆட்சி முறையைக் கொண்டிருந்ததன் காரணமாகவும் மக்களுடைய வாழ்க்கையயின் அத்தனை அம்சங்களையும் பாதிப்பதாயிற்று. சுருங்கச் சொன்னால் முந்திய நூற்றாண்டுகளில் நிகழ்ந்தது போன்று ஆங்கில அரசு ஆட்சியை கைப்பற்றியதோடு மட்டும் அமையவில்லை. தனது சாயலில் முழுச் சமுதாயத்தையே மாற்றியமைக்கவும் உருவாக்கவும் முனைந்தது: முயன்றது. இன்னொரு விதமாக கூறுவதானால், ஆங்கிலேயராட்சி முதலாளித்துவ சகாப்தத்தை இந்தியாவில் அறிமுகப்படுத்தியது. நிலப்பிரபுத்துவத்திலிருந்து விடுபட்டு, தனித்துவமான முன்னேற்றப் பாதையில் வளர்வதற்குத் துடித்துக் கொண்டிருந்த முதலாளித்துவத்திற்கு,"கிழக்கு இந்தியாவிலும் சீனாவிலும் கிடைத்த சந்தைகள், அமெரிக்காவில் குடியேற்றம், காலனிகளுடன் நடந்த வியாபாரம்", போக்குவரத்திலும் விற்பசைன் சரக்குகளிலும் ஏற்பட்ட பெருக்கம் ஆகியன

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உத்வேகம் அளித்தன. அவற்றின் பயனாகத் துரித வளர்ச்சி அடைந்த முதலாளித்துவம் தனது செல்வாக்கிற்குள் அகப்பட்ட இடங்களிலெல்லாம் தனது தேவைக்கு உகந்த சூழ்நிலைகளை உருவாக்க முற்பட்டது. மார்க்ஸ் இதனைக் கவித்துவ நடையில் விவரித்தார்.

> பூர்ஸ்வா உற்பத்தி முறையை ஏற்றுத் தழுவாவிட்டால், அழிவே ஏற்படும் என்ற நிர்ப்பந்தத்தின் மூலம், சகல நாடுகளும் அம்முறையைக் கடைப்பிடிக்கும்படி அது செய்கின்றது. தான் நாகரிகம் என்று குறிப்பிடுவதைச் சகல நாடுகளும் ஏற்றுத் தழுவ வேண்டுமென்று பூர்ஸ்வா வர்க்கம் கட்டாயப்படுத்துகின்றது. அதாவது அவையும் பூர்ஸ்வாக்களாக வேண்டுமென்று அது நிர்ப்பந்திக்கின்றது. ஒரே வாக்கியத்தில் சொல்லப்போனால். தன் பிரதிபிம்பத்தைப் போன்ற ஓர் உலகத்தை இது சிருஸ்டிக்கின்றது.
>
> **(மார்க்ஸ் - எங்கல்ஸ் கம்யூனிஸ்ட் கட்சியின் அறிக்கை – 1969)**

இந்நிலையிலேயே நாளடைவில் மேல்மட்டத்தினர் மட்டுமன்றி சாதாரண மக்களும் வெவ்வேறு வழிகளிலும் வகைகளிலும் புதிய மாற்றங்களை உணரத் தலைப்பட்டனர். அவற்றின் பாதிப்புக்கு ஆட்பட்டனர். சமுதாயப் பார்வை மிகப் பரந்த அளவில் உருவாகும் நிலை இயல்பாகவே எழுந்தது.ட

அந்நியராட்சியின் பாதிப்புக்களை நோக்கி எழுந்த இப்பார்வை மூன்று வகையாகச் செயற்பட்டது. இம் மூன்று நோக்குகள் இன்று வரையில் நமது சமுதாயத்திலும் இலக்கியத்திலும் உந்து சக்திகளாக இலக்கிய இயக்கங்களையும் அப்படியே பின்பற்றும் போக்காகும்.

இரண்டாவது: மேனாட்டு நாகரிக முறைகள், பன்னாட்டு கூறுகள் என்பவற்றை முழுமையாக நிராகரித்து, அயல்வரவற்ற – திணைப்பிறந்த – அடிப்படைகளை விடாப்பிடியுடன் கைக்கொள்ளும் போக்காகும்.

மூன்றாவது: அந்நியராட்சியின் விளைவாக வந்து சேர்ந்த பிறப்புரிமையான – திணைப்பிறந்த பண்பாட்டுக் கூறுகளுடன் இணைத்துச் சமரசமும் அமைதியும் காணும் போக்காகும். பின்பற்றல், மறுத்தல், ஒன்றிணைத்தல் என இம்மூன்று போக்குகளையும் சுருக்கமாக விவரிக்கலாம். இவையே நவீன தமிழ் இலக்கியத்தைப் பாதித்து வழிநடாத்தும் முக்கிய போக்குகள் என நான் கருதுகிறேன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சென்ற நூற்றாண்டின் நடுப்பகுதிக்குப் பின்னர் தொடங்கி இன்றுவரை, இம்மூன்று அடிப்படைப் போக்குகளுமே எத்தனையோ விகற்பங்களுடனும் வண்ண வேறுபாடுகளுடனும் இலக்கியத்தில் உருவரையறை செய்யும் காரணிகளாய் இருந்து வருகின்றன. நல்லைநகர் ஆறுமுகநாவலர், இராமலிங்க அடிகள் முதலிய சென்ற நூற்றாணடுப் புலவர் பெருமக்களிலிருந்து, இன்றைய "புதுக்கவிதை" எழுத்தாளர்கள் வரை எந்த ஒரு தனிநபரையோ அல்லது இலக்கிய குழுவினரையோ ஒன்றுக்கு மேற்பட்டவற்றையோ சார்ந்தவர்களாகவே இருக்கக் காணலாம்.

தமிழகத்தை மட்டுமன்றி அனைத்திந்தியாவையே எடுத்து நோக்கிலும் இம்முன்று போக்குகளே அடிப்படையானவையாகத் தோன்றும். உதாரணமாக, நவீன மலையாள இலக்கிய மறுமலர்ச்சி இயக்கத்தை எடுத்து நோக்கினால், குமரன் ஆசான் (1873 – 1924), உள்ளுர் பரமேஸ்வர அய்யர் (1877-1949) வள்ளத்தோல் நாராயண மேனன்(1878 – 1958) ஆகிய மூவருமே நவீ்ன மலையாளக் கவிதைக்கு "வேகமும் விறுவிறுப்பும் ஊட்டியவர்கள்" இம் மூவரில் உள்ளுர் பரமேஸ்வர அய்யர் பழமையைப் போற்றிப் பேணியவராயும், வள்ளத்தோல் தேசிய இயக்கத்தில் பெரும் பங்கு கொண்டு மேலைத்தேய கலை இலக்கியங்களையும் இந்தியக் கலை மரபுகளையும் இணைக்க முயன்றவராயும் காணப்படுகின்றனர். வள்ளத்தோலை கேரள மக்கள் மகாகவி என்று போற்றிப் பாராட்டுவர். இம் மூவருள் பாரதியாருடன் ஒப்பு நோக்கத்தக்கவர் இருவருக்கும் பல ஒற்றுமைகள் உண்டு.

இன்னும் சொல்லப் போனால், சென்ற நூற்றாண்டின் பிற்பகுதியில் இந்தியாவில் முகிழ்த்த முக்கியமான மூன்று சமய இயக்கங்களை ஆராய்ந்தாலும் இவ்வுண்மை உறுதிப்படும். கிறிஸ்துவ தனியொருமைக் கோட்பாடு, ஐரோப்பிய தாராளக் கொள்கை, ஆங்கிலக் கல்வி முதலிய அம்சங்களினால் ஈர்க்கப்பட்டு அவற்றைப் பெருமளவிற்குப் பின்பற்றிய பிரம்ம சமாஜத்தினரை முதலாவது பிரிவினருக்குச் சிறந்த உதாரணமாய் காட்டலாம். பிரம்ம சமாஜம் பிற்காலத்தில் பிளவுண்டு சென்று தேய்ந்து இறந்தது உண்மையே. எனினும் அதன் முனைப்பான பின்பற்றல் பண்பு இன்றுவரை எத்தனையோ வடிவங்களில் எமது கலை இலக்கிய உலகில் நிலவி வருகிறது.

ஒரு விதத்தில் பிரம்மசமாஜத்துக்கு எதிர் விளைவாக, பரமதக் கோட்பாடுகள், நாகரிகக் கூறுகள், பண்பாட்டுச் சின்னங்கள் ஆகியவற்றை முற்றாக மறுத்தும் அந்நியராட்சியை உள்ளூர வெறுத்தும் தமது பாரம்பரியத்திலுள்ள சிந்தனைகளையும் நம்பிக்கைகளையுமே பிரதானப்படுத்திப் பிரசாரஞ் செய்த ஆரிய சமாஜத்தினரை இரண்டாவது பிரிவினருக்குச் சிறந்த காட்டாகக் கொள்ளலாம். வடக்கே தோன்றிய

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தயானந்த சரஸ்வதியிலிருந்து, இலங்கை நல்லூர் ஆறுமுக நாவலர்வரை மீட்டுயிர்ப்புக் குரல் (Revivalist) எழுப்பிய அனைவரும் இப்பிரிவில் அடங்குவர். சபாபதி நாவலரிலிருந்து இன்றைய நவ தொல்காப்பியவாதிகள் வரை இத்தகைய மீட்டெழுச்சிக் குரலையே இலக்கியத்தில் ஒலிப்பர்.

இவ்விரு இருமுனைப் போக்குகளுக்குச் சிறிது வேறுபட்ட முறையில் எதிலும் காணப்படம் விழுமிய அம்சங்களைத் திரட்டி ஒன்றிணைப்பினை உன்னதமான வாழ்க்கைத் தத்தவமாகவும் சமய நெறியாகவும் உருவாக்கிய இராமகிருஸ்ண மடாலயத்தினரை மூன்றாவது பிரிவினருக்குத் தகுந்த எடுத்துக் காட்டாய் கருதலாம். இம்மூன்று போக்குகளும், முறையே,ராஜாராம் மோகன்ராய். துயானந்த சரஸ்வதி, ராமகிருஸ்ண பரமகம்ஸர் ஆகிய மூவராலும் சிறப்பாகச் சமயத்துறையில் தோற்றுவிக்கப்பட்டனவாயினும், பின்பற்றல், மறுத்தல், ஒன்றிணைத்தல் என்னும் பண்புகள் சகல துறைகளுக்கும் பொருந்துவனவாய் உள்ளன.

இம்மூன்று போக்குகளும் வேறுபடுத்திக் கூறத்தக்கனவாய் இருப்பினும் நடைமுறையில், பல இலக்கியகர்த்தாக்களின் படைப்புக்களில் இப் பண்புகள் விரவிக் காணப்படுவதும் உண்டு. அதுமட்டுமன்று, இம்மூன்று பண்புகளில் ஒன்றை மட்டும் சார்ந்து பற்றிக் கொள்ளும் எழுத்தாளர்கள் நமது யுகத்தில் ஆற்றல் மிக்க எழுத்தாளராய் அமைந்ததுமில்லை. மீட்டுயிர்ப்புக் கொள்கையை நாவலர் பின்பற்றினார்: தமிழோடு சைவமும் சேர்ந்தே வளருதல் வேண்டும் என நம்பினார். பிரசித்தி பெற்ற பரசமயக் கோளரியாயும் விளங்கினர். அந்த வகையில் தயானந்த சரஸ்வதியை நிகர்த்தவர் நாவலர். ஆயினும் தனது சொந்த மதத்திலும் சமயச் சடங்குகளிலும் காணப்பட்ட பல பண்புக்கேடுகளையும் நீக்கியே புத்துயிரூட்டும் பணியை நிறைவேற்ற முடியும். என்பதை உணர்ந்தார். "யாழ்ப்பாணச் சமயநிலை" என்ற அவரது கட்டுரையில் இவ்வுணர்வைக் கண்டு தெளியலாம். இதனைக் கவனிக்கும்போது நாவலர் மீட்டுயிர்ப்பு திரு. வி. கலியாண சுந்தரரை எடுத்துக் கொண்டால், சமய, சமுதாயத்துறைகளிலே பல சீர்திருத்தங்களை எடுத்துரைத்த மார்க்சீயம் முதலியவற்றை ஒன்றிணைத்துச் சமரசம் காணவும் அவர் விழைந்தமையைக் காண்கிறோம். சி. என். அண்ணாதுரை அவர்களை எடுத்துக் கொண்டால் பகுத்தறிவு, நாத்திகம், வைதிக மறுப்பு, வர்ணாசிரம எதிர்ப்பு முதலியவற்றை வலியுறுத்தி இயக்கம் நடத்திய சீர்திருத்தவாதியாய்த் தோற்றமளித்த அவர், பழந்தமிழ்க் கொள்கைகளையும் நாகரிகத்தையும் மீண்டும் நிலைநாட்ட விரும்பிய மீட்டுயிர்ப்புவாதியாகவும் இயங்கினார். என்பது மறுக்கவியலாததொன்றாகும். உண்மையில் இருபதாம் நூற்றாண்டிலே மார்க்சீயம் தமிழில் பயிலத்துவங்கிய பின்னரே மேற்கூறிய மூன்று போக்குகளினின்றும் விடுபட்டு வரலாற்றுணர்வுடனும் இயக்கவியல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அடிப்படையிலும் பிரச்சனைகளை நோக்கி நடைமுறைக்குத் தேவையான மார்க்கங்களைக் கூறும் போக்கு ஓரளவு வளர்ந்து வந்திருக்கின்றது.

இலக்கியத் துறையை – குறிப்பாக சிருஸ்டி இலக்கியத்தை – ஆராயும் பொழுது இவ்வுண்மையை கண்டு கொள்ள அதிக நேரம் செல்லாது. ஊதாரணமாக,ஈழத்து நவீன தமிழிலக்கிய முன்னோடியாம் பாவலர் தெ. அ. துரையப்பாபிள்ளையை எடுத்து நோக்கினால் ஒன்றிணைக்கும் நோக்கும் போக்கும் அவரிடத்துக் காணப்படும். யாழ்ப்பாண சுவதேசக்கும்மி என்ற நூதனமான படைப்பில் மரபுவழி வரும் மதிப்பீடுகளுக்கும் புதிய ஆசாரங்களுக்கும் இடையே தோன்றும் முரண்பாட்டைக் காண்பதோடு, அதற்கு ஆசிரியர் பரிகாரம் காண முற்பட்டமையையும் காணலாம்.

சிற்சில ஐரோப்பிய பழக்க வழக்கஞ்

சிறந்ததென் பதற்காட் சேபமில்லை

முற்சிந்தனையின்றி நந்தேசா சாரங்கள்

முற்றும் விடலாமோ?

எம்முள்

நல்லாயிருக்கும் பழக்க வழக்கத்தை

நாம் விடலாகாது

என்று பாவலர் பாடுகையில் அவரது இலக்கிய நோக்கின் அடிப்படை வெளிப்படையாகின்றது.

உண்மையில் மகாகவி பாரதியின் கவிப் படைப்புக்களிலேயே இப்போக்குகள் மூன்றையும் வெவ்வேறு அளவிற் காணக்கூடியதாகவுள்ளது. ஒன்றையொன்று ஈர்த்தும் எதிர்த்தும் தழுவியும் மறுத்தும் நிற்கும் வலித்திழுப்பு நிலையிலே Tension முரண்பாடுகள் சங்கமமாகும் அபூர்வ ஆற்றல் பிறக்கிறது. இலக்கியத்துக்கு இந்நிலை பெருவாய்ப்பானது.

குருட்டுத்தனமான ஆங்கிலேயக் கல்வியைப் "பேடிக் கல்வி" என்றும் "ஊணர் கல்வி" என்றும் கண்டிககும் கவிஞர். வேறொரு நிலையில் "சென்றிடுவீர் எட்டுத் திக்கும்: கலைச் செல்வங்கள் யாவும் கொளர்ந்திங்கு சேர்ப்பீர்" என்றும் "புத்தம் புதிய கலைகள், பஞ்ச பூதத்தின் நுட்பங்கள் கூறும் : மெத்த வளருது மேற்கே." என்றும் சுறினார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நவீன உலகிலே, குறிப்பாக விஞ்ஞானமும் கைத்தொழிலும் உலகை எத்தனையோ வழிகளில் பிணைத்து இணைக்கும் யுகத்திலே, கிழக்கு- மேற்கு , பழமை —புதுமை, ஆன்மீகம் - அறிவியல் முதலாய பல்வேறு தளங்களிலிருந்து முரண்படும் போக்குகள் எழுவது இயல்பே. அது புறநிலை உணர்வினை உருவாக்கிக் கொள்வதே. நவீன இலக்கியத்தின் இன்றியமையாத தேவையாயுள்ளது. இத்தேவையைப் பொருளுணர்வுடனும் கலை நுணுக்கத்துடனும் நிறைவேற்றும் இலக்கிய கர்த்தாக்களே ஆற்றல் நிறைந்தோராகக் கணிக்கப்படுகின்றனர்.

(இக்கட்டுரை 1972ம் ஆண்டு இலங்கை வானொலியில் நிகழ்த்தப்பட்ட உரைத்தொடர் ஒன்றினை ஆதாரமாகக் கொண்டது. இப்பொழுது இரண்டொரு விளக்கங்கள் இன்றியமையாமை கருதிச் சேர்க்கப்பட்டுள்ளன.)

(நன்றி குமரன் புத்தக நிலையம்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முற்போக்கு எழுத்தாளர் சங்க ஆரம்ப கால வரலாறு

1954ம் ஆண்டு யூன் மாதம் கொழும்பு விவேகானந்தர் கல்லூரி மண்டபத்தில் நிகழ்ந்த இலக்கிய கூட்டம் முற்போக்கு எழுத்தாளர் சங்கத்தின் உருவாக்கத்திற்குரிய ஆரம்ப நிகழ்ச்சியாயிற்று. அககூட்டத்திலே கே.கணேஸ், ச.இளங்கீரன்,அ.இராகவன்,எம்.பி. பாரதி ஆகியோர் கலந்து கொண்டனர்.

அதே கூட்டத்தில் இடம்பெற்ற கருத்துப் பின்னூட்டல்களைத் தொடர்ந்து இலங்கை முற்போக்கு எழுத்தாளர் சங்கம் 1954 ஆம் ஆண்டு யூன் 27ம் நாள் தோற்றம் பெற்றது. அதன் பொதுச் செயலாளராக பிரேம்ஜி ஞானசுந்தரமும் இணைச் செயலாளர்களாக இளங்கீரன் மற்றும் ஜோக்கின் ஆகியோரும் பொருளாளராக எம். பி. பாரதியும் தெரிவு செய்யப்பட்டனர். இலங்கை முற்போக்கு எழுத்தாளர் சங்கம் தனது வேலைத்திட்டத்திலே பின்வருவனவற்றைக் குறித்தது.

1. நாடுகளை ஆக்கிரமிப்புச் செய்யும் செயற்பாடுகளை எதிர்த்தலும் நிரந்தர உலக சமாதானத்துக்காகப் பாடுபடுத்தலும்.
2. போராட்டங்களுக்கு வெற்றியீட்டும் இலக்கியங்களையும், நடப்பியலை வெளிப்படுத்தும் ஆக்கங்களையும் படைத்தல்.
3. காலனித்துவ விடுதலைக்காக நாடுகள் மேற்கொள்ளும் போராட்டங்களுக்கு ஆதரவு வழங்குங்கள்.
4. சாதியமைப்பு, பெண் அடிமைத்தனம், மூட நம்பிக்கைகள் போன்ற சமூக அநீதிகளை எதிர்த்துப் போராடுதல்.
5. இந் நாட்டின் தேசிய இனங்களின் பிரதேச ரீதியான சுயநிர்ணய உரிமையை ஏற்றுக் கொண்டு அதற்கான நடவடிக்கைகளுக்கு ஆதரவு தருதல்.
6. வெறும் உருவ வாதத்தையும் அதே போல வெறும் பிரசங்க இலக்கியங்களையும் நிராகரித்தல்.
7. ஆபாச இலக்கியப் போக்கினை நிராகரித்தல்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

8. நிற வெறியூட்டும் இலக்கியப் போக்கை அடியோடு நிராகரித்தல்.

9. பிற்போக்குச் சிந்தனை கொண்ட போதையூட்டும் இலக்கியங்களை மறுதலித்தல்.

10. தொன்மையான இலக்கியங்களை மார்க்சிய அடிப்படைகளில் நோக்குதல்.

11. அழிந்து போகும் நிலையில் உள்ள கலை வடிவங்களுக்குப் புத்துயிரளித்தல்.

12. முற்போக்கு எழுத்தாக்கங்களையும் விமர்சித்தல். அதாவது அகவிமர்சனத்தை முன்னெடுத்தல்.

13. முற்போக்கு எழுத்தாளர்களின் சொந்த வாழ்க்கையும் நேர்மைப் பாங்கு கொண்டதாக இருத்தல் வேண்டும் என்பதை வலியுறுத்தல்.

14. தேசிய முன்னேற்றத்துக்கான பொதுவான போராட்டங்களுக்கு ஆதரவு தருதல்.

15. அடிப்படை உரிமைகளின் பாதுகாப்புக்கு ஆதரவு தருதல்.

16. எழுத்தாளர்களினது ஒற்றுமைக்கும் நல்வாழ்வுக்கும் உதவுதல்.

17. தேசிய இனங்களுக்கிடையே நல்லுறவை வளர்த்தல்.

18. பிறமொழி இலக்கியங்களைத் தேசிய மொழிகளில் ஆக்கம் செய்தல்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆசிரியரின் பிற நூல்கள்

-சி.குமாரலிங்கம்.

1. செந்தமிழ் நாடெனும் போதினிலே
2. Poems on Genius People ஆங்கில கவிதைத் தொகுதி
3. Unity ஆங்கில கவிதைத் தொகுதி
4. Famous Philosophers of the World.
5. இலங்கையில் தேர்தலும் அரசியலும்
6. உலகப் புகழ்பெற்ற அமைப்புக்கள்
7. Socratees and his Followers.
8. றோமியோ யூலியட்

   மொழி பெயர்ப்புக் கவிதைகள்
9. சேக்ஸ்பியர் கவிதைகள்

   தமிழ் மொழி பெயர்ப்பு
10. கால்மாக்ஸ் எழுதிய கவிதைகள் (தமிழ் மொழிபெயர்ப்பு)

இவற்றின் தமிழ் நூர்ல்களெல்லாம் கொழும்பு இந்து சமயத் திணைக்களத்தினால் கொள்வனவு செய்யப்பட்டது.

இலங்கையில் தேர்தலும், அரசியலும் என்ற நூல் கொழும்பு கல்வி அமைச்சினால் பாடசாலை நூல் நிலையங்களில் இருக்கக்கூடியது என அங்கீகரிக்கப்பட்டது. இவர் எழுதிய எல்லா ஆங்கில நூல்களும் கொழும்பு தேசிய நூலகத்தினால கொள்வனவு செய்யப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பேராசிரியர் சு.வித்தியானந்தன் மனைவி
கமலாதேவியுடன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திரு. சி. குமாரலிங்கம் 1947ல் மீசாலையில் பிறந்தார். தனது உயர் கல்வியை யாழ் இந்துக் கல்லூரியில் பெற்றுக் கொண்டார். 1969ல் இலங்கை வங்கியில் சேர்ந்து கொழும்பு, காலி, அநுராதபுரம், வவுனியா, கந்தளாய், கிண்ணியா, திருகோணமலை, மஸ்கெலியா,ஹற்றன், யாழ்ப்பாணம், சுண்ணாகம், சாவகச்சேரி ஆகிய இடங்களில் சேவை செய்தார். வேலை செய்த இடங்களிலெல்லாம் கலை,இலக்கியக் கழகங்களுடன் சேர்ந்து செயற்பட்டார். அவர் எழுதிய நூல்களை வாங்கி அவரை ஊக்குவிப்பது எல்லோரதும் கடமையாகும்.

பொன்.பாலகுமார்
இலங்கை வங்கி பிரதேச முகாமையாளர் (வன்னி)
01.04.2016

IBSN - 978-955-51477-7-4

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org